www.padippakam.com


# தமிழர் கண்ணோட்டம்

கோப்பு: 13
மடல் : 3

தி.பி. 2030 : மீனம்
கி.பி. 1999 : மார்ச்

விலை ரூ. 5.00





படிப்பகம்

www.padippakam.com



# நிறை குறை

## மத வெறிக்கு மாற்று நாத்திக வாதம் அல்ல

"தமிழ்த் தேசிய வாதிகளுக்கு" தொடர் அருமை. தொடரவும்.

மதவெறியையும், மதத்தையும் ஒன்று படுத்தி காணக் கூடாது. (கிரேக்கம் முதல் கிழக்கு வங்கம் வரை) இரண்டும் தனித்தனி. மதத்தையும் கடவுளையும் இணைத்துப் பார்க்க கூடாது. இரண்டும் வேறு. எந்த மதத்திலும் சேராமலும் கடவுள் நம்பிக்கை உடையவராய் இருக்கலாம். மதத்தின் பெயரால் இரத்தம் சிந்தப்பட்டது உண்மை. அது மிக அதிகம். இன்றைய மதவெறி பிடித்த காலகட்டத்திற்கு இந்தக் கட்டுரை தேவையானதுதான். ஆனால் மதவெறிக்கு மாற்றாக நாத்திக வாதத்தை தூக்கிப் பிடிப்பது சரியன்று. அது ஏற்கெனவே முயன்று தோற்ற தத்துவம். பாதிரியாரின் வெள்ளை ஆடையில் சிலுவைப் போரின் இரத்தம் மட்டும்தான் தெரிகிறது என்பது சரியன்று. அவ்வாறாயின் பொது உடைமைக்கட்சியின் சிவப்பில் ஸ்டாலினின் சைபீரிய இரத்தமும், போல்பாட்டின் கம்யோடிய இரத்தமும்தான் தெரிகிறது என்று கூறலாமா? ஆத்திகர்கள் ஒருவரை ஒருவர் அல்லது நாத்திகர்களைத் தாக்கியது போன்று நாத்திகர்கள் ஒன்று திரண்டு அழிவுப்பாதையில் ஈடுபடவில்லை என்ற வருத்தம் தோன்றுவது போல் கட்டுரை தொனிக்கிறது. இங்கு நாத்திக வாதம் வாதப்போரில் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளும் சக்தி வாய்ந்தது என்ற காரணமும் கூறப்பட்டுள்ளது விந்தை.

தமிழகத்தின் பூணூல் அறுப்பும், பிள்ளையார் சிலை உடைப்பும் இராமருக்கு (சிலைக்கு) செருப்படியும், "பார்ப்பானை அடி பாம்பினை விடு" என்பதும் வன்முறையின் வித்துக்கள்தானே. ஒருவேளை ரண்வீர் சேனை போன்று அமைத்து ஆத்திகர்களைக் கொல்லவில்லை என்று வருந்துகிறார் போலும். தமிழகத்தின் இருண்ட காலம், நாத்திகர்கள் என்று நம்பப்படும் களப்பரர் ஆட்சி காலத்தில் என்ன நடந்தது என்பது புரியாத புதிராகவே இருக்கிறது. சோவியத் இரஷ்யாவில் சர்ச்சுகள் எரிக்கப்படவில்லையா? அல்பேனியா தன்னை நாத்திக நாடு என்று பிரகடனம் செய்து கொள்ளவில்லை? அங்கெல்லாம் வாதம் புரிந்துதான் எல்லாரையும் சரி செய்தனரோ? அல் பேனியாவில் இன்று இசுலாமிய தீவிர வாதம் தலை தூக்கியுள்ளதைக் கவனிக்கவும்.

மதத்தைப் பற்றிய மார்க்சிய புரிதல் உங்களுக்குத் தெரியாததல்ல! மதம் ஒரு அபின் என்ற பொழுது அபின் என்பது மருந்து என்ற பொருளிலேயே பயன்படுத்தப்படுகிறது. ஏனெனில் அடுத்தவரியிலேயே அது நோயுற்ற சமூகத்தில் வாழும் மனிதனுக்கு இதம் அளிக்கும் தென்றல் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. வயிற்றுக்கு அப்பால் எதையும் காட்டுவதற்கு இயலாத காரணத்தாலேயே மார்க்சீயம் இன்று தேக்க நிலையில் உள்ளது. இன்று புதிதாக வரும் மேற்கத்திய புதிய மார்சியவாதிகள் சர்ச்சுகளுடன் உறவு கொண்டுள்ளனரே. போப்பாண்டவர் காஸ்ட்ரோவுடன் தோன்றவில்லையா?

வைக்கம் போர், கோவில் செல்லும் வழியில் தாழ்த்தப்பட்டோர் செல்லுவதற்கான

தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

தமிழர் கண்ணோட்டம்

மார்ச் 1999

அனைத்துத் தொடர்புகளுக்கும்

**பெ.மணியரசன்**

ஆசிரியர்

53 (அ) சமீன்தார் குடியிருப்பு
புது ஆற்றுச் சாலை,
தஞ்சாவூர் - 613 001
தொ.பே.: 32994

அச்சிட்டோர்:
நீட் பிரிண்டர்ஸ்,
சென்னை - 600 003.

வடிவமைப்பு:
**காவிரி கணிப்பொறி அச்சு,**
தஞ்சாவூர் - 613 001.

அட்டைப் படம்: நன்றி: The Hindu

**தன்னுரிமைப் போருக்கு முன்னுரிமை கொடுப்போம்**
**தமிழ்த் தேச வரலாற்றில் புதுயுகம் படைப்போம்**

# மக்களவை தேவையா?

குடும்பக் கட்டுப்பாடு திட்டம் தமிழ் நாட்டில் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டதால் இங்கு மக்கள் தொகைப் பெருக்க விகிதம் குறைந்துள்ளது. அதாவது மக்கள் தொகை பெருகியுள்ளது; ஆனால் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும் போது, பெருக்க விகிதம் குறைந்துள்ளது.

இதனால், மக்கள்தொகை விகிதம் அதிக அளவில் பெருகிய மாநிலங்களுக்கு, நாடாளுமன்ற மக்களவைத் தொகுதிகள் கூடுதலாகக் கொடுக்க வேண்டியுள்ளது. தமிழ்நாட்டில் தற்போதுள்ள 39 மக்களவைத் தொகுதிகளை 33 ஆகக் குறைக்க வேண்டியுள்ளது. இது இப்பொழுது தில்லி அரசின் முன் உள்ள யோசனை.

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி 39 தொகுதிகளைக் குறைக்கக் கூடாது என்று வலியுறுத்தி வருகிறார்.

இந்தக் கட்டத்தில், கூட்டாட்சி அமைப்பில் நாடாளுமன்றம் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி விவாதம் நடப்பது தேவை.

ஓர் உண்மையான கூட்டாட்சியில் மையத்தில் அமையும் நாடாளுமன்றத்திற் நேர்முகத் தேர்தல் தேவையா? மக்கள் நேரடிய வாக்களித்து அந்நாடாளுமன்றத்தை நி வேண்டுமா? தேவை இல்லை.

இப்பொழுது மாநிலம் அழைக்கப்படுகின்ற தேசிய



படிப்பகம்

www.padippakam.com

குடியரசுகளின் சட்டப் பேரவையை (இதை நாடாளுமன்றம் என்றும் அழைக்கலாம்.) மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

கூட்டாட்சி மையத்தில் தற்போதுள்ள மக்களவை மற்றும் மாநிலங்கள் அவை இரண்டையும் நீக்கி விட்டு 'பிரதிநிதிகள் அவ்வயை' உருவாக்க வேண்டும். இப்பிரதிநிதிகள் மாநிலங்கள் என்று சொல்லப்படுகின்ற தேசிய இனக் குடியரசுகளின் சட்டப் பேரவைகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

மிகப் பெரிய உத்தரப் பிரதேசமாக இருந்தாலும் மிகச் சிறிய மிஜோரம் ஆக இருந்தாலும் எல்லா மாநிலங்களுக்கும் சமமாக மேற்படி பிரதிநிதிகள் எண்ணிக்கையைத் தீர்மானிக்க வேண்டும். உ.பி.க்கும் மிஜோரமுக்கும் சம எண்ணிக்கையா என்று வட நாட்டார் வருந்தினால், மிஜோரம் தனியே பிரிந்து போக அனுமதித்து விடலாம்.

எல்லா மாநிலங்களுக்கும் சம எண்ணிக்கையில் பிரதிநிதிகள் என்று வைத்தாலும் இந்திப் பிரதிநிதிகளே அதிகம் இருப்பர். உ.பி., பீகார், ம.பி., ராஜஸ்தான், அரியானா, தில்லி, இமாச்சலப்பிரதேசம் ஆகியவை இந்தி மாநிலங்களே. பிரதிநிதிகள் அவையில் இந்தி பேசுவோர் ஆதிக்கம் வந்து விடாமல் இருக்க சில ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருக்கும்.

ஓர் உண்மையான கூட்டாட்சியில் மையத்திற்கு அதிகாரங்களும் நிர்வாகப் பொறுப்புகளும் குறைந்து விடும். அதை நிருவகிக்க பிரதிநிதிகள் அவை போதும்.

தில்லியில் மக்களவை, மாநிலங்களவை ஆகிய இரண்டையும் நீக்கிவிட்டு, பிரதிநிதிகள் அவை (இதற்கு வேறு பெயரும் வைத்துக் கொள்ளலாம்) முறையைக் கொணரத் தமிழர்கள் கோரிக்கை எழுப்ப வேண்டும்.

# முனை மழுங்க வில்லை 356

பாம்புப் புற்றுக்குள் கைவிட்டது போல், பாரதிய ஜனதாக் கட்சி அரசு பீஹாரில் 356-க்குள் கைவிட்டு, தப்பித்தால் போதும் என்று கையை இழுத்துக் கொண்டு விட்டது. கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல், காங்கிரசை அம்பலப்படுத்தி விட்டோம் என்ற போலி வெற்றிப் புலம்பலுக்குக் குறைவில்லை. பா.ஜ.க.வின் பண்பாடே அது தான்.

அதாவது காங்கிரஸ் கட்சி தலித் விரோதக் கட்சி என்று அம்பலமாகி விட்டதாம். பீகார் ஆட்சிக் கலைப்பை நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் ஆதரிக்காததன் மூலம் அது இவ்வாறு அம்பலமாகிவிட்டதாம்.

பா.ஜ.க., காங்கிரஸ் இரண்டுமே தலித் விரோதக் கட்சிகள் தாம்; மக்கள் விரோதக் கட்சிகள் தாம்.

பா.ஜ.க. அணிக்கு மாநிலங்களவையில் பெரும்பான்மை இல்லாத காரணத்தால் பீகார் ஆட்சிக் கலைப்புத் தீர்மானத்தை அங்கு நிறைவேற்ற முடியவில்லை. எனவே கலைக்கப்பட்ட ராப்ரிதேவி ஆட்சி மீண்டும் அங்கு உயிர் பெற்று விட்டது.

இதில் நாம் கவனிக்க வேண்டியது ஆட்சிக் கலைப்பு விதி 356 முனை மழுங்காமல் அப்படியே இருக்கிறது. அந்தக் கொடுவாள் பின்னுக்கு இழுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பது மட்டுமே.

பா.ஜ.க.வும் அல்லது காங்கிரசும் விதி 356 ஐ இனி பயன்படுத்தமாட்டா என்று கருதி நாம் ஏமாறக்கூடாது.

அரசமைப்புச் சட்டத்திலிருந்து நீக்கப்படும் வரை 356 -க்கு எதிரான போராட்டத்தில் தொய்விருக்கக் கூடாது ❖



படிப்பகம்

www.padippakam.com

# சிவப்பாவுக்கு நேர்ந்த சிக்கல்

- இராசேந்திர சோழன்

சென்னை உயர்நீதி மன்ற நீதிபதியாகப் பணியாற்றி வந்த சிவப்பா கடந்த 4.3.99 அன்று பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அவர் தனது பிறந்த நாளைத் தவறாகக் குறிப்பிட்டு பதவியில் நீடித்து வந்துள்ளார் என குடியரசு தலைவர் முடிவு செய்ததைத் தொடர்ந்தே அவர் இப்பதவி நீக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டார் என்று சொல்லப்படுகிறது. என்றாலும் கூட்டணிக் கட்சிகளின் வாத்திய இசைக்கேற்ப நாட்டியமாட வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கும் பா.ஜ.க. வின் சுயநல வாத நாற்காலி அரசியலும் இதில் செயல்பட்டு சந்தி சிரித்து வருகிறது.

கர்நாடகத்தைச் சேர்ந்த சிவப்பா கடந்த 8 ஆண்டுகளாக நீதிபதியாக பணியாற்றி வருபவர்.



1991ல் அங்குள்ள உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பொறுப்பேற்று நான்கு ஆண்டுகள் பணிபுரிந்து பின் 1994 ஏப்ரல் முதல் சென்னை உயர்நீதி மன்றத்தில் பணியாற்றி வருபவர்.

அவரது பள்ளியிறுதி வகுப்புச் சான்றிதழில் அவரது பிறந்த நாளாகக் குறிப்பிட்டிருப்பது 11.12.1936. அவர் சட்டப் படிப்பு முடித்து வழக்கறிஞராகத் தன்னைப் பதிவு செய்து கொண்டபோதும் இதே தேதியைத்தான் குறிப்பிட்டு பதிவு செய்து கொண்டிருக்கிறார். பிறகு 1987 ம் ஆண்டு வாக்கில் தனது பிறந்த தேதி தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தனது உண்மையான பிறந்த நாள் 11.12.1938 தான் என்றும் கூறி அதற்கான உரிய ஆவணங்களைக் காட்டி, சம்பந்தப்பட்ட வட்ட ஆட்சியரிடமிருந்து சான்றிதழையும் பெற்று தனது பிறந்த நாள் 1938 என்று திருத்தம் செய்து கொண்டு விட்டார். அந்தத் திருத்தமும் அப்போது முறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது.

அதன்பிறகு கிட்டத்தட்ட பத்தாண்டுகள் கழித்து பிரச்சினை துவங்குகிறது. தன்னை ஒரு சமூக நல ஊழியர் என்று சொல்லிக் கொள்ளும், பங்களூரைச் சேர்ந்த எஸ்.வி. சிங்கரே கௌடா என்வர் 1997 நவம்பரில் ஒரு மனு தாக்கல் செய்கிறார். அதில் சிவப்பா அரசு ஆவணங்களில் தன் பிறந்த தேதியை சட்ட விரோதமாக மாற்ற ஏற்பாடு செய்தார் என குற்றம் சாட்டியிருந்தார்.

அப்போதைய சட்ட மற்றும் நீதித்துறையின் இணை அமைச்சராயிருந்த கலப் இந்த மனுவை 7.1.98-ல் குடியரசு தலைவரின் பார்வைக்கு அனுப்பியிருக்கிறார். அப்போதைய உச்ச நீதிமன்ற நீதிபதி எம்.எம்.புன்சியிடம் குடியரசு தலைவர் இதுபற்றி கலந்தாலோசித்தார். அவரது ஆலோசனைப்படி நீதிபதி சிவப்பாவிடம் குடியரசு தலைவர் விளக்கம் கேட்டார். சிவப்பா இதற்கான விளக்கத்தை 1998 அக்டோபரில் குடியரசு தலைவரிடம் அளிக்கிறார். குடியரசு தலைவர் மேற்படி சிங்கரே கௌடாவின் புகார் மனு, சிவ்ப்பாவின் விளக்கம் இரண்டையும் ஆராய்கிறார். ஆராய்ந்து சிவப்பாவின் விளக்கத்தில் நிறைவுறாமல் அவரது பிறந்தநாள் 11.12.36 தான் என்று முடிவு செய்கிறார். இப்படி அவர் முடிவு செய்து அதற்கான சட்ட பூர்வ ஆணையை வெளியிட்ட நாள் 6.3.99.



படிப்பகம்

www.padippakam.com

இச்சம்பவம் சாதாரண ஒரு நிர்வாக நடைமுறைபோலத் தோற்றமளித்தாலும், இது வழக்கறிஞர்கள் மத்தியிலும் சட்ட வல்லுநர்கள் மத்தியிலும் பலத்த சர்ச்சைகளை எழுப்பியுள்ளது. இந் நடவடிக்கைக்கு ஆதரவாகவும் எதிராகவும் பலத்த வாதப்பிரதிவாதங்களும் ஒரு கட்டத்தில் கை கலப்பும் ஏற்பட்டது.

"பொதுவாக நீதிபதிகள் ஓய்வு பெறும் வயது 62. சிவப்பா வழக்கறிஞராகப் பதிவு செய்து கொள்ளும் போது கூட தன் பள்ளியிறுதி வகுப்புச் சான்றிதழில் உள்ள 1938 என்பதையே பிறந்த ஆண்டாகத் தந்திருக்கிறார். அதன் பிறகே இந்தத் திருத்தத்தைச் செய்திருக்கிறார். இதன் மூலம் 98 திசம்பரிலேயே ஓய்வு பெற்றிருக்க வேண்டிய சிவப்பா, தான் மேலும் இரண்டாண்டு காலம் அதாவது 2000 ம் ஆண்டு திசம்பர் வரை பணி புரியும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டார். அதனாலேயே இந்தப் பதவி நீக்கம் ஆணை....

"உயர் நீதி மன்ற நீதிபதி ஒருவரின் வயது பற்றிய பிரச்சினை ஏற்பட்டால் குடியரசு தலைவர் அது பற்றி உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியோடு கலந்தாலோசித்து முடிவெடுக்கும் அதிகாரத்தை இந்திய அரசமைப்புச் சட்டப்பிரிவு 217(3) வழங்குகிறது. அந்த அதிகாரத்தை அரசமைப்புச் சட்ட விதிகளுக்கு பொருத்தமான வகையிலேயே குடியரசு தலைவர் கையாண்டிருக்கிறார்....

எனவே சட்டரீதியில் இந்த பதவி நீக்கம் சரியானதே என்கிற ஒரு வாதம் முன் வைக்கப்படுகிறது.

அதே வேளை, இதே சட்ட ரீதியிலேயே இந்த பதவி நீக்கம் நியாயமற்றது என்கிற ஒரு வாதமும் எழுப்பப்படுகிறது.

1. சிலர் படிக்கும் போது ஒரு வயதையும், பணிக்குப் போனபிறகு ஒரு வயதையும் குறிப்பிட்டு, தங்கள் பணிக்காலத்தை நீட்டிக் கொள்கிறார்கள். சட்ட பூர்வமாகவே இதற்கு வாய்ப்பிருந்தாலும் தார்மிக ரீதியில் இது தவறானது. சிவப்பா விஷயம் அப்படிப்பட்டதாயிருந்தாலும் எதிர்க்கலாம்.

2. ஆனால், சிவப்பாவின் உண்மையான பிறந்த ஆண்டு 1938 தான். அவருடைய பிறப்பைக் குறிக்கும் ஜாதகம், ஆரம்பபள்ளியில் அவர் வயதைக் குறிக்கும் நகல் இவையிரண்டிலும் 1938 என்றுதான் உள்ளது. பள்ளியிறுதி வகுப்புச் சான்றிதழில் மட்டும் தான் 1936 என்று தவறாக உள்ளது.

3. சிவப்பா தான் வழக்கறிஞராக பதிவு செய்யும் போது, தன் பள்ளியிறுதி வகுப்புச் சான்றிதழில் உள்ள தேதியை வைத்தே பதிவு செய்தார். பிறகு சில ஆண்டுகளில் உண்மையான பிறந்த ஆண்டை உரிய சட்ட விதி முறைகளைக் கையாண்டு அதன் படிதான் திருத்தியிருக்குகிறார்.

4. அதோடு அவர் நீதிபதியாகப் பணியில் சேர்ந்து அதன்பிறகு இந்தத் தேதியைத் திருத்தியிருந்தால் அவர் நீதிபதியாக மேலும் இரண்டு ஆண்டுகள் நீடிக்கவே இந்த திருத்தத்தைச் செய்தார் என்று உள்நோக்கம் கற்பிக்கலாம். ஆனால் அவர் நீதிபதியாவதற்கு நான்கு ஆண்டுகள் முன்பேயே அவர் இந்தத் திருத்தத்தைச் செய்து விட்டார். எனவே நேர்ந்துவிட்ட ஒரு தவறைத் திருத்தி சரியான பிறந்த ஆண்டை சட்டப்படியே அவர் சரி செய்திருக்கிறார். ஆகவே இதில் தவறேதுமில்லை என்கின்றார் மற்றொரு தரப்பினர்.

அதோடு அவர்கள் வேறு சில வினாக்களையும் எழுப்புகின்றனர்.

1. அதாவது வயது பற்றி சர்ச்சை எழுந்த ஆண்டு 1997 இதுபற்றி குடியரசுத் தலைவர் அலுவலகம் விளக்கம் கேட்டு சிவப்பா பதில் அளித்தது 1998 அக்டோபரில் சர்ச்சைக்குரிய ஆண்டான 1936ன் படி சிவப்பா 62 வயதை முடித்து ஓய்வு பெற்றிருக்க வேண்டும் என்றால் அவர் 1998 திசம்பரிலேயே ஓய்வு பெற்றிருக்க வேண்டும். 1998 அக்டோபரில் சிவப்பா அளித்த விளக்கத்தை ஏற்க மறுப்பதாயிருந்தால் 1998 திசம்பரிலேயே குடியரசு தலைவர் அவரை வீட்டுக்கு அனுப்பியிருக்க வேண்டும். அப்படி அல்லாமல் 1998 திசம்பருக்குப் பிறகும் அவரைப் பணியாற்றவிட்டு விட்டு அதற்குப் பிறகு கிட்டத்தட்ட மூன்று மாதம் கழித்து சரியாகச் சொல்வதானால் 86 நாட்கள் கழித்து அவர் வயது பற்றி முடிவு செய்கிறேன் என்று சொல்லி 36ம் ஆண்டைத்தான் ஏற்பேன் என்று சொன்னால் இதற்கு என்ன பொருள்?

2. இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 124(4)ன் படி உச்ச நீதி மன்றத்தின் ஒரு நீதிபதி தவறான நடத்தை அல்லது திறனின்மை காரணமாக பதவியிலிருந்து அகற்றப்பட வேண்டுமானால்



படிப்பகம்

www.padippakam.com

நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும் அந்த அவையின் மொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மையினராலும், வந்திருந்து வாக்களிப் போரில் மூன்றில் இரண்டு பங்கிற்கு குறையாத பெரும்பான்மையினராலும் ஆதரிக்கப்பட்ட ஒரு தீர்மானத்தின் மூலம் பரிந்துரைக்கப்பட்டு குடியரசு தலைவருக்கு அனுப்ப அவரது ஆணை வாயிலாக அன்றி நீதிபதி எவரும் பதவியிலிருந்து அகற்றப்படுதல் ஆகாது என்கிறது.

அரசமைப்புச் சட்டப்பிரிவு 218 மேலே உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்காகச் சொல்லப்பட்ட சட்டப்பிரிவு 124ன் உட்பிரிவு 4 மற்றும் 5 ஆகியவை உயர்நீதி மன்ற நீதிபதிகளுக்கும் பொருந்தும் என்கிறது.

இது நீதித் துறையின் சுயேச்சைத் தன்மையையும், பாரபட்சமற்ற அதன் செயல் பாட்டையும் உறுதிப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட சட்டப் பிரிவுகளாகும்.

3. உச்ச நீதிமன்ற நீதிபதியின் வயது பற்றிய சர்ச்சை எழுந்தால் அதை நாடாளுமன்றம் தான் தீர்மானிக்க வேண்டும். என்று அரசமைப்புச் சட்டப்பிரிவு 124(2அ) சொல்லுகிறது. ஆனால் உயர் நீதிமன்ற நீதிபதியின் வயது பற்றிய சர்ச்சை எழுந்தால் அதை குடியரசு தலைவர், உச்ச நீதி மன்ற தலைமை நீதிபதியோடு கலந்தாலோசித்து முடிவு செய்யலாம் எனக் கூறுகிறது. இது ஒரு முரண்.

4. அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட காலத்தில் இந்த இர்ண்டு சட்டப் பிரிவுகளுமே இல்லை. 1963 ம் ஆண்டு கல்கத்தா உயர்நீதி மன்ற நீதிபதியாக இருந்த ஜோதி பிரகாஷ் மித்தல் என்பவரின் வயது பற்றிய சர்ச்சை வந்தபோது அதில் எழுந்த சட்டச் சிக்கலைத் தீர்க்க அரசமைப்புச் சட்டத்தில் பதினைந்தாவது திருத்தமாக உயர்நீதி மன்ற நீதிபதிகளுக்கான இச்சட்டம் 217(3) கொண்டு வரப்பட்டது. அந்த நேரத்தில் தான் உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கான சட்டம் 124(24) பிரிவும் சேர்க்கப்பட்டது.

124(2A) பிரிவிலாவது மக்கள் பிரதிநிதிகளின் பெரும்பான்மைக் கருத்து என்னும் சனநாயகத்திற்கு வாய்ப்புள்ளது. எனில் 217(3)ல் அந்த வாய்ப்பு மறுக்கப்படுகிறது. இது நீதித் துறையில் நிர்வாகம் தலையீடுவதற்கான வாய்ப்புக்கு வழி ஏற்படுத்தித் தருகிறது. அந்த வாய்ப்பு 36 ஆண்டுகள் கழித்து தற்போது தவறாக பயனபட்டுள்ளது. என்கின்றனர்.

இப்படிப்பட்ட சட்ட வாதங்கள் ஒருபுறம் இருக்க தார்மீக நியாயம் என்கிற நோக்கிலும் இப்பிரச்சினையில் வேறு சில கேள்விகள் எழுகின்றன.

1. ஊழியர் ஒருவரை பணி நீக்கம் செய்வதானால் கூட அதற்கான குற்றச் சாட்டுகளை சுமத்தி அவர் அதற்கு பதில் தந்து, தன் நிலையை விளக்க வாய்ப்பளிக்க வேண்டும். அப்படி தரும் விளக்கத்தை ஏற்காமல் அவர் மீது நடவடிக்கை எடுக்க முடிவு செய்தால் அப்படி இறுதி முடிவெடுப்பதற்குமுன் மீண்டும் அவருக்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பது பொதுவான அரசு ஊழியர் நடத்தை விதி முறைகளில் ஒன்று.

2. சாதாரண ஒரு அரசு ஊழியருக்கே இந்த பாதுகாப்பு என்றால் நாட்டின் பொறுப்புள்ள-உயர்ந்த பதவிகளை வகிப்பவர்களுக்கு இப்படிப்பட்ட பாதுகாப்பு இன்னும் கூடுதலாகவே இருக்க வேண்டும். ஆனால் அப்படி அல்லாமல், குறைந்த பட்ச அரசு ஊழியருக்கு உள்ள வாய்ப்பு கூட சிவப்பாவுக்கு மறுக்கப்பட்டுள்ளது. முதலில் அவரிடம் விளக்கம் கேட்ட குடியரசு தலைவர் 86 நாட்கள் கழித்து இறுதி முடிவு எடுக்கும்போது இது பற்றி பதில் அளிக்க சிவப்பாவுக்கு ஒரு வாய்ப்பு அளித்திருக்க வேண்டுமல்லவா அவருடைய நிலையைக் கேட்டு அறிந்திருக்கவேண்டுமல்லவா...?

3. அதே ஜோதி பிரகாஷ் மித்தல் வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் குடியரசு தலைவர் தனது முடிவை அறிவிப்பதற்கு முன்னால் உரிய ஆதாரங்களைப் பரிசீலித்து விட்டு, குற்றம் சாட்டப்பட்ட நீதிபதியிடமும் விளக்கம் கேட்ட பிறகே முடிவெடுத்து உத்தரவிடவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதே, அந்த வழிகாட்டும் நெறியாவது பின்பற்றப்பட்டதா?

4. இன்னொன்று ஏற்கெனவே 1964ம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிப தியாக இருந்த எஸ். இராமச் சந்திர ஐயர் என்பவரு டைய தம்பி அறுபதாமாண்டு பிறந்த நாளைக் கோலக லமாகக் கொண்டாட, தம்பிக்கே 60 வயதாகும் போது, அண்ணனுக்கு 62 வயதாகியிருக்குமே என்று ஒருவர்



படிப்பகம்

www.padippakam.com

உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்ய, இம் மனு விசாரணைக்கு ஏற்கப்பட்ட உடனேயே அவர் பதவி விலகி பணியை விட்டு வந்தார் எனப்படுகிறது.

அதே போல பிரச்சினை என்று வந்தபிறகு சிவப்பாவை தானாக பதவி விலகியிருக்கலாம் என்கிற ஒரு கருத்தும் நிலவுகிறது.

இராமச்சந்திர அய்யர் உண்மையிலேயே 62 வயதை அடைந்திருந்தோ அல்லத எதற்கு பிரச்சினை என்றோ விலகியிருக்கலாம். சிவப்பா தன் உண்மையான பிறந்த ஆண்டு 1938 தானே என்றோ, அல்லது இதற்கெல்லாம் உடன்பட்டால் எதிர்க் கூற்று உண்மையாகி தன் நேர்மை சந்தேகிக்கப்படும் அபாயம் உண்டு என்று கருதியோ பதவி விலகாமலிருந்திருக்கலாம். இது அவரவர் பிரச்சனையை எதிர்கொள்ளும் தனி நபர் சுவாபம் ஆளுமை மனநிலை சம்பந்தப்பட்டது.

ஆனால் சிவப்பா 98 அக்டோபரில் தந்த விளக்கத்தை ஏற்பதற்கில்லை என அப்போதே குடியரசு தலைவர் அறிவித்திருந்தால் 98 திசம்பரோடு சிவப்பா பணியை முடித்திருப்பார். அல்லது தவிர்க்க முடியாத கால தாமதம் ஏதும் ஏற்பட்டிருந்தால் அதற்கு அடுத்த சில தினங்களுக்குள்ளாவது அவரைப் பதவி விலகச் செய்து இருக்கலாம். இப்படி எந்தக் காரியத்தையும் செய்யாது சிவப்பாவுக்கும் வேறு எந்த வாய்ப்பும் வழங்காது மூன்று மாதம் முடிய இருக்கும் தருணத்தில் குடியரசு தலைவர் இப்படி அறிவித்ததுதான் சந்தேகங்களை எழுப்புவதற்கான வாய்ப்புக்கு வழிகோலுகிறது.

முந்தைய குடியரசு தலைவர்களை நோக்க தார்மீக நெறிகளின் அடிப்படையில் ஓரளவு சுயேட்சைத் தன்மையோடும், ஜனநாயக கோட்பாடுகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலும் செயல்படுத்துவதாக நம்பப் படும் கே. ஆர். நாராயணன் இந்த விஷயத்தில் ஏன் இவ்வாறு நடந்து கொண்டார் என்பதும் கேள்விக்குரியதாக இருக்கிறது.

அவர் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி சட்ட ரீதியாகவே. இந்த முடிவை எடுத்ததாகக் கொள்வதனாலும் மார்ச் 6ம் தேதி குடியரசு தலைவர் அலுவலகம் வெளியிட இருக்கும் ஒரு அறிவிப்பை சட்ட அமைச்சர் 4-ம் தேதியே வெளியிட்டது ஏன்?

குடியரசு தலைவர் அலுவலகச் செய்திகள் அவரின் செயலர் வழி வெளிவராமல் அதற்கு முன்பாகவே சட்ட அமைச்சர் மூலம் வெளிவரவேண்டிய அவசியமென்ன?

அப்படி வந்த அந்த செய்தியும் உடனடியாக தொலை வரிமூலம் சென்னை உயர்நீதிமன்ற பதிவாளருக்கு அனுப்பப்பட்டு அவர் மூலம் உடனடியாக சிவப்பாவுக்கு அவர் அமர்விலிருக்கும் போதே கொண்டு சென்று கொடுத்து அவர் பணிகளை பாதியில் நிறுத்தி எழுந்துவரும் அளவுக்கு நிர்பந்திக்க வேண்டிய தேவை என்ன?

இப்படிப்பட்ட வினாக்கள் தான் இப்பிரச்சனைக்கு வேறு பல இழிபரிமாணங்களை ஏற்படுத்துவதாக இருக்கின்றன.

வயது பற்றிய பிரச்சினையில் சிவப்பாவின் நிலை சரியா, அல்லது குடியரசு தலைவரின் முடிவு சரியா என்று விவாதிப்பது இங்கே நமக்கு நோக்கம் இல்லை. அது இங்கே நமக்கு முக்கியமும் இல்லை. ஒரு சட்டப்பிரச்சனை என்ற அளவில் அது தன் போக்கில் தன் தீர்வைத் தேடிக் கொள்ளட்டும். அப்படித்தான் இதற்கு தீர்வு காண இருப்பதாக சிவப்பாகவும் சொல்லியிருக்கிறார். எனவே அது அதன் போக்கில் முடிவாக வேண்டிய விஷயம். ஆனால் சிவப்பா பதவியிலிருந்து நீக்கப்பட்ட முறை சரியாக என்பதுதான் இங்கே நமக்கே கேள்வி. பிரச்சனை.

நீதிபதி சிவப்பா கிரிமினல் வழக்குகளில் தேர்ந்த அநுபவம் உள்ளவர். ஜெயலலிதா மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பாக அவர் தாக்கல் செய்த முன் ஜாமின் மனுவை 1996 டிசம்பர் 6ம் தேதி தள்ளுபடி செய்ய, 7ம் தேதி ஜெயலலிதா கைது செய்யப்பட்டார். ஜெயலலிதா மீதான குற்றச் சாட்டுகளில் அடிப்படை ஆதாரம் இருப்பதாகத் தன் தீர்ப்பில் குறிப்பிட்டார்.

வழக்கறிஞர் விஜயன் தாக்கப்பட்ட இடஒதுக்கீடு சம்பந்தப்பட்ட வழக்கில் அப்போதைய அ.தி.மு.க. அமைச்சர் எஸ்.டி.எஸ் உட்பட பலர் சிக்க காரணமாக இருந்தவர்.

சசிகலா, மற்றும் சில ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கைதாகு முன்பு தாக்கல் செய்த முன் ஜாமின் மனுக்களை தள்ளுபடி செய்திருக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

சசிகலா மீதுள்ள குற்றப் பத்திரிக்கையைத் தமிழாக்கம் செய்ய நியமிக்கப்பட்டவர்களில் இட ஒதுக்கீடு முறை பின் பற்றப்பட வில்லை என தாக்கல் செய்யப்பட்ட மனுவைத் தள்ளுபடி செய்தவர்.

இப்படித் தொடர்ச்சியாக தங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் தங்களுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கி வரும் சிவப்பாவை வீட்டுக்கு அனுப்ப அ.தி.மு.க. வினர் வழிபார்த்துக் கொண்டு இருந்திருக்கிறார்கள். சிவப்பா நீதிபதியாகு முன்பு கார்நாடக் மாநிலத்தில் அட்வகேட் ஜெனரலாக பணியாற்றியிருந்திருக்கிறார். அப்போது இவரால் பாதிக்கப்பட்ட யாரோ சிலர்தான் இவரது வயது பற்றிய பிரச்சினையை எழுப்பி வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் அறிந்து இவர்களைத் தேடிக் கண்டு பிடித்து வேறு சில செல்வாக்கையும் பயன்படுத்தி இந்தக் காரியத்தைச் செய்து முடித்திருக்கின்றனர்.

அதோடு மத்திய அமைச்சராயுள்ள தம்பித்துரையின் தொகுதி மாவட்டமான கரூர் மாவட்டத்தில் தனது உறவினர் ஒருவர் சம்பந்தப்பட்ட பல கோடி ரூபாய் மணல் குவாரி வழக்கில் மார்ச்சு 5ம் தேதி சிவப்பா தீர்ப்பு வழங்கக் கூடும் என்று அஞ்சியே குடியரசு தலைவர் 6ம் தேதி வெளியிட இருக்கும் இந்த அறிவிப்பை அமைச்சர் தம்பித்துரை 4ம் தேதியே அவசரஅவசரமாக தொலை அச்சு மூலம் தெரிவித்து அவரை வீட்டுக்கு அனுப்பி இருக்கிறார்.

நேர்மையான நிலையான ஆட்சியைத் தருவதாக மக்களை வசீகரித்து வாக்கு வாங்கி வந்த பா.ஜ.க. அவர்களை வஞ்சித்து தங்கள் ஆட்சி நிலைப்பதற்காக எப்படிப்பட்ட நாணயமற்ற செயலுக்கும் துணை போவார்கள் என்பதற்கு இது மீண்டுமொரு எடுத்துக்காட்டு.

சி.பி.ஐ. இயக்குநராக இருந்த ஜோகிந்தர் சிங்கை மாற்றியவர்கள் அமலாக்கப்பிரிவு இயக்குநராக இருந்த பேஜ் பருவாவை மாற்றியவர்கள்; சென்னை உயர்நீதி மன்ற நீதிபதியாக இருந்த லிபரானை மாற்றியவர்கள், நூற்றுக்கும் மேற்பட்ட அ.தி.மு.க. வழக்கறிஞர்களை மத்திய அரசின் வழக்கறிஞர்களாக நியமித்தவர்கள் வருமான வரி மேல் முறையீட்டு நடுவர் மன்ற நீதிபதியாக சென்னையிலிருந்த அப்துல் ரசாக்கை மாற்றியவர்கள் சென்னை உயர்நீதி மன்றம் நியமித்த , தனி நீதிமன்றங்கள் செல்லத் தக்கவை அல்ல என்று ஆணை பிறப்பித்தவர்கள் தங்கள் நாற்காலிகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அ.தி.மு.க.வில் சமூகவிரோத ஊழல் பேர்வழிகளுக்கு அடி வருடி ஊழியம் புரிய சிவப்பா பதவி நீக்கத்தில் இப்படிப்பட்ட நடைமுறையைக் கையாண்டு தங்கள் சுகவாசத்தைக் காப்பாற்றிக் கொள்ள சாகசம் புரிந்திருக்கிறார்கள்.

அதிகாரத்தில் இருப்பவர்கள், ஆதிக்க வெறி பிடித்தவர்கள் தங்கள் பதவிகளைப் பாதுகாத்துக் கொள்ள எப்படிப்பட்ட ஜனநாயக விரோத நடவடிக்கைகளிலும் இறங்குவார் என்பதற்கான விகாரமான ஒரு வெளிப்பாடு இது.

தங்கள் வழிக்கு வராத நீதிபதிகளை அச்சுறுத்தும் நடவடிக்கை மட்டுமல்ல இது. நாளை நீதித் துறையின் சுயேச்சைத் தன்மையையே சவக்குழிக்குள் தள்ளி, நிர்வாகப் பொறியமைவுக்கு அதை கட்டுப்பட்டதாக, கட்டுப்பெட்டித் தனமான ஆக்கும் முயற்சியும் ஆகும் இது. தார்மீக நெறிமுறைகளில் நம்பிக்கை கொண்டவர்கள் இதை எதிர்க்க வேண்டும். சட்ட நெறிமுறைகளில் நம்பிக்கை உள்ளவர்கள் இந் நடைமுறைக்கு மாற்று வழி காண வேண்டும். ஜ

## தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியில் பேரா. பா. கல்யாணி

❖❖❖

*தேசிய இனப்பிரச்சினை தாய் மொழிக் கல்வி, தாழ்த்தப்பட்டோர் விடுதலை மற்றும் மனித உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடி வருபவரும், மக்கள் கல்வி இயக்கம் சார்ந்த வருவான தோழர் பேரா. பா. கல்யாணி, தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியில் நீண்டகாலமாக உழைத்து வரும் ஓய்வு பெற்ற ஆசிரியர் தோழர் மு. கந்தசாமி, ஆகியோர் 16.3.99 அன்று திண்டிவனத்தில் நடைபெற்ற கிளைக் கூட்டத்தில் தமிழத் தேசப் பொதுவுடைமைக் கட்சியில் இணைந்தனர். உடன் தோழர்கள் த. பாலகிருஷ்ணன், கி.ரவிச்சந்திரன் ஆகியோரும் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியில் தங்களை உறுப்பினராகிக் கொண்டனர்.*



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்த் தேசியத் தோழர்களுக்கு

- பெ. மணியரசன்

## தமிழ்த் தேசியமும் தமிழ் ஈழமும்

மதுரை மாநாடு மனப் பதிவுகளை மட்டுமல்ல வரலாற்றுப் பதிவுகளையும் உண்டாக்கியது. "ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு" 7.3.99 அன்று மதுரைத் தமுக்கம் கரையரங்கில் உண்மையான எழுச்சி மாநாடாக நடந்தது.

இம் மாநாட்டை நடத்திய தமிழ் ஈழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு உண்மையில் பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைக்கும் பணியில் வெற்றி பெற்றுள்ளது. ஒருங்கிணைப்புக் குழுவின் அமைப்பாளர் திரு. பழ. நெடுமாறன் அவர்களுக்கும் அதில் உறுப்பு வகிக்கும் அமைப்புகளுக்கும் பாராட்டுகள்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதுள்ள தடையைப் பயன்படுத்திக் கொண்டு தமிழ்த் தேசிய உணர்வாளர்களையும் ஈழவிடுதலை ஆதரவாளர்களையும் தமிழக அரசும் தில்லி அரசும் நசுக்கி வருகின்றன. தமிழ்த் தேசியத்திற் கெதிரான தமிழகத் துரோக சக்திகள் நம்மை எழும்ப விடாமல் அடக்கி வைக்க எல்லா வகையிலும் நிரந்தரப் பிரச்சாரம் செய்கின்றன.

இவ்வளவு நெருக்கடிகளுக்கிடையேயும், சுடச்சுடரும் பொன்போல ஈழவிடுதலை ஆதரவாளர்கள் பெருந்திரளாகத் தமுக்கத்தில் கூடினர். ("சங்கரதாஸ் சுவாமிகள் மன்றம்" என்பது அதன் பெயர். ஆனால் தமுக்கம் கரையரங்கம் என்றே அழைக்கப்படுகிறது.)

ஈழவிடுதலையை ஆதரித்தும் தமிழ் ஈழவிடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வலியுறுத்தியும் பேச்சாளர்கள் எழுச்சியுரையாற்றும் போது கூட்டத்தினர் எழுந்து நின்று கையொலி எழுப்பினர்; முழக்கங்கள் எழுப்பினர். மண்டபம் அதிர்ந்தது. அடக்கி வைக்கப்பட்ட ஆவேசம் பீறிட்டுக் கிளப்பியதைப் பார்க்கும் போது மேடையில் இருந்தோர் குருதி நாளங்கள் சூடேறின.

ஆனால் அடிக்கடி கையொலிகளும் முழக்கங்களும் எழுப்பப்பட்டதால், போகப் போக முழக்கத்தால் எழும் உணர்ச்சி வீச்சு குறைந்தது. தனித்துவமான கருத்து எதுவும் சொல்லப்படாமல் வெறுமனே "விடுதலைப்புலிகள்", "தம்பி பிரபாகரன்" என்று உச்சரித்தாலே கைதட்டுவது என்று ஆன பிறகு கை தட்டல் தனது வீச்சை இழந்தது.

சீரிய கருத்துகள் எதுவும் பேசாமலே "விடுதலைப்புலிகள்", "பிரபாகரன்" என்று தமது பேச்சில் அடிக்கடி குறிப்பிட்டாலே போதும். கை தட்டல் வாங்கி விடலாம் என்ற உணர்வு பேச்சாளர்கள் மனதில் ஏற்படக் கூடிய பலவீனமும் உண்டானது.

சிலர் அமைதியாக ஆழமாகப் பேசினர்கள். பலர் அப்பேச்சுகளை ஈர்ப்புடன் கேட்டனர். ஆனால் கை தட்டும் தோழர்கள் சிலர்க்கு அப்பேச்சுகள் உகப்பாக இல்லை.

இப் போக்கினை மதுரை, மாநாட்டில் மட்டும் பார்த்து விட்டு, இதை எழுதவில்லை. வேறு சில நமது மாநாடுகளிலும் பேரணிகளிலும் இவ்வாறான போக்கினைக் கவனிக்க முடிந்தது.

நிலைமை எந்த அளவிற்குப் போகிறது என்றால், தமிழ்நாட்டு அரசியல், தமிழகத் தமிழர்களின் துன்பங்கள், சிக்கல்கள் இவற்றை ஒட்டிய இந்திய அரசியல்- அதன் மீதான நமது விமர்சனம் ஆகியவற்றைப் பற்றி பேச்சாளர்கள் உரியவாறு அக்கறை செலுத்தி சொற்பொழிவாற்றுவதில்லை. பேச்சாளர்கள் அவ்வாறு பேசுவதில்லை என்பதில் ஒரு பாதிக்கு அவர்கள் பொறுப்பேற்க வேண்டும்; மறு



படிப்பகம்

www.padippakam.com

பாதிக்குப் பார்வையாளராக உள்ள நமது தமிழ்த் தேசியத் தோழர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

1998 அக்டோபர் 31 ஆம் நாள் சென்னையில் தமிழ்ச் சான்றோர் பேரவை நடத்திய தமிழகப் பெருவிழாவின் தொடக்கப் பேரணி பனகல் பூங்காவிலிருந்து ஜெர்மன் அரங்கம் வரை நடந்தது. அவ்வூர்வலத்தில் பல இளந் தோழர்கள் "விடுதலைப்புலிகள்", "பிரபாகரன்" என்று மட்டுமே முழக்க மெழுப்பினர். விழா அமைப்பாளர்கள் அச்சிட்டுக் கொடுத்த முழக்கங்களை அவர்கள் எழுப்பவில்லை.

ஊர்வல இடையில் ஒரு தோழர் "மும் மொழிக் கொள்கை- மோசடிக் கொள்கை, இரு மொழிக் கொள்கை ஏமாற்றுக் கொள்கை, ஒரு மொழிக் கொள்கையே - உரிமைக் கொள்கை" என்று முழக்கம் கொடுத்தார். ஆனால் அப்பத்தியில் வந்தவர்கள் திருப்பிச் சொல்லவில்லை. "விடுதலைப் புலிகளைப் பற்றி போடுங்கள்" என்றார்கள்.

**இந்தத் தோழர்களின் உணர்வுகளை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. தில்லி ஆதிக்கக் காரர்களாலும் அவர்களது தமிழகக் கங்காணிகளாலும் அடக்கி ஒடுக்கப்பட்ட தமிழ் இன ஒருமைப்பாட்டு உறவை வெளிப்படுத்த வாய்புக் கிடைக்கும் போது உணர்ச்சி வெள்ளம் கரையுடைத்துப் பாய்கிறது. ஆனால் வெள்ளம் வாய்க்கால் வழியே சென்றால்தான் வயலுக்குப் பாயும்; பயிர்கள் வளரும்.**

இதில் இன்னொரு முக்கியச் செய்தி, தமிழ்த் தேசியத் தோழர்களின் முன்னுரிமை பெற்ற வேலைத் திட்டம் தமிழ்த் தேசத் தன்னுரிமை- தமிழ்த் தேசக் குடியரசு என்ற வகையில் தான் இருக்கிறது. நம்மைச் சூழ்ந்துள்ள ஆறு கோடித் தமிழர்களின் அரசியல், பொருளியல், பண்பாட்டியல் அடிமைத் தனங்களுக்கு விடுதலையும் இச்சிக்கல்களுக்குத் தீர்வும் அவற்றிற்கான செயல்பாடுகளும் தான் தமிழ்த் தேசிய அமைப்புகளின் முதன்மை இலக்கு!

இவ்வாறு நமது முதன்மை இலக்கை நாம் வரையறுத்துக் கொண்டால் தான் தமிழ்நாட்டுத் தமிழர்களை நம் அணி வகுப்பில் பெரும் திரளாகத் திரட்ட வாய்ப்பு ஏற்படும். தமிழ் நாட்டில் நாம் ஒரு பெரும் சக்தியாக இருந்து தமிழ் ஈழவிடுதலைக்கு ஆதரவுக் குரல் கொடுத்தால் தான் தில்லி, மற்றும் தமிழக அரசுகள் ஈழத் தமிழர்களுக்கு எதிரான ஒடுக்குமுறையை மட்டுப்படுத்தும்.

தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் ஈழத்தின் பெரும்பகுதியை விடுவித்து நிர்வாகம் செய்து வருகிறார்கள். ஆனால் கடந்த எட்டு ஆண்டுகளாக விடுதலைப்புலிகளின் மீதான தடை இன்னும் இங்கு தொடர்கிறது; மேலும் நீட்டிக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் அத்வானி அறிவிக்கிறார். 6 கோடித் தமிழகத் தமிழர்களிடையே நமக்குக் கணிசமான சக்தி இருக்குமானால் இந்தத் தடை இவ்வளவு காலம் நீடிக்காது.

நம்மில் சில பேர் எளிய கணக்கொன்று போடுகிறார்கள். தமிழ் ஈழம் மலர்ந்து விட்டால் சுலபமாகத் தமிழ்த் தேசத் தன்னுரிமை கிடைத்து விடும் என்பது அந்தக் கணக்கு. வரலாறு அவ்வளவு எளிய விடைகளை தன்னிடம் வைத்துக் கொள்வதில்லை. அவரவருக்கும் பிரசவ வலி தனி! அனுபவங்கள் உதவலாம்; அது வேறு.

ஈழ விடுதலைப் போர் முற்றி அது வெற்றிக் கனியைக் கொய்யும் தருவாயில் உள்ளது; இப்பொழுது அது பற்றி முழுக் கவனம் செலுத்தினால் போதும்; ஈழம் கிடைத்த பிறகு தமிழ் நாட்டின் நிகழ்ச்சி நிரலை வகுத்துக் கொள்ளலாம் என்று சில தோழர்கள் கருதுகிறார்கள். ஈழ விடுதலை வெற்றி எழுப்பும் அலை வீச்சை உள்வாங்கிக் கொண்டு, இங்கு தமிழ்த் தேசிய பேரெழுச்சியை முடுக்கி விட வேண்டுமானால் அதற்கு ஏற்கெனவே கட்டியமைக்கப்பட்ட வலுவான தமிழ்த் தேசிய அமைப்பு இருக்க வேண்டும் என்பது முன் நிபந்தனையாகும். ஈழ விடுதலை வெற்றியின் தாக்கத்தை பயன்படுத்திக் கொள்ள இயலாத அளவுக்கு மெலிவான அமைப்பு நம்மிடம் இருக்குமானால் அது கொள்ள முடியாதவன் வாயில் கொழுக்கட்டையைத் திணித்ததாகவே இருக்கும்.

விடுதலைப் புலிகளின் போர் உத்திகளைக் கவனித்தால் ஒன்று தெரியும். அவர்கள் பிற நாடுகளின் ஆதரவைக் கோரிய போதிலும் தங்கள் மண்ணில் கால் பதித்து முதன்மையாகத் தம் மக்களைச் சார்ந்து நின்று அப்போரை நிகழ்த்துகிறார்கள். அவர்களின்



படிப்பகம்

www.padippakam.com

வெற்றியின் இரகசியங்களில் இது முக்கியமானது. வீரஞ்செறிந்த பாலஸ்தீன விடுதலை இயக்கம், குர்திஸ்தான் விடுதலை இயக்கம் போன்றவற்றின் அனுபவங்களை ஈழவிடுதலைப் போர் அனுபவத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பது நமக்கு ஒரு புரிதலைக் கொடுக்கும்.

ஆக, தன் மண்ணில் கால் பதித்து, தன் மக்களைச் சார்ந்து நிற்கும் தேசிய இன இயக்கம் தான் ... இலக்கை அடையும். தமிழ் நாட்டு மக்களைச் சார்ந்து தமிழ்த் தேசிய இயக்கத்தைக் கட்ட வேண்டும். ஈழ விடுதலையானது எளிய முறையில் தமிழ்த் தேசக்குடியரசு பிறந்திட வழி வகுக்கும் என்ற மனக் கணக்கில் இருப்பதன் மூலம் வரலாற்றுக் கணக்கில் நாம் தோற்றுவிடக் கூடாது.

இன்னும் சிலர் இருக்கிறார்கள், மண்டபக் கூட்டப் பேச்சுகளில் மார்பு மயிர்க் காம்பு சிலிர்த்து, கைதட்டுவதோடு சரி. ஈழ விடுதலைக்கு ஆதரவாக நாம் நடத்தும் ஜனநாயகப் போராட்டங்களில் வாய்ப்பிருந்தும் கூட அவர்கள் கலந்து கொள்வதில்லை. சில பேச்சாளர்களுக்கும் இது பொருந்தும். அவர்கள் அனுமதிக்கப்பட்ட கூட்டங்களில் பேசுவதன் மூலமே ஈழ விடுதலைக்கு பெரும் பங்களித்து விட்டதாகக் கருதிக் கொள்கிறார்கள். அப்படிப்பட்ட பேச்சுக்களைக் கேட்டு கிறு கிறுப்பதன் மூலமே தங்கள் பங்கை செலுத்தி விட்டதாக சில ரசிகர்கள் மன நிறைவடைகிறார்கள்.

செம்மணியில் ஒரே குழியில் 400 தமிழர் பிணங்கள் புதைக்கப்பட்ட செய்தி கிடைத்த பின் தமிழகமெங்கும் சந்திரிகா கொடும்பாவி கொளுத்தும் போராட்டம் நடத்தினோம். இப்போராட்டம் தமிழ் ஈழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு சார்பில் நடந்தது. இதில் கலந்து கொள்ள வாய்ப்பிருந்தும் கலந்து கொள்ளாதவர்கள் எத்தனை பேர்? அவ்வாறு வாய்ப்பிருந்தும் கலந்து கொள்ளாத பேச்சாளர்கள் எத்தனை பேர்? இவற்றை எல்லாம் கவனித்து நம்மை நாம் ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது.

தமிழ்த் தேசத் தன்னுரிமைக்கு இயக்கம் கட்டுவோம். தமிழ் ஈழ விடுதலைக்கு ஆதரவளிப்போம் •

## தன்னுரிமை நாள் பொதுக் கூட்டம்

1990 பிப்ரவரி 25 சென்னை பெரியார் திடலில் தமிழ்த் தேசிய தன்னுரிமை மாநாடு நடைபெற்றது. தன்னுரிமை தீர்மானங்கள் முன் மொழிந்து தோழர் பெ. மணியரசன் பேசினார். மாநாட்டில் தீர்மானங்கள் முன் மொழிந்து பேசியதற்காக தோழர் பெ. மணியரசன் மீது 1967 ஆம் ஆண்டின் பிரிவினைவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டது. மாநாட்டில் கவிதை படித்த கவிஞர் ஈரோடு தமிழின்பன் தொலைக் காட்சியில் செய்தி வாசிப்பதிலிருந்து நீக்கப்பட்டார். இந்திய அரசுக் கொடியை அவமதித்ததாக கவிஞர் அறிவுமதியின் மீது வழக்கு தொடரப்பட்டது. அது எட்டாண்டுகள் நடந்து விடுதலையானார்.

இம் மாநாட்டின் தீர்மானங்களை விளக்கி த.தே.பொ.க. சார்பில் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 25-ல் தன்னுரிமை நாள் பொதுக்கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

### தஞ்சை

பிப்ரவரி 25 தஞ்சை நகர த.தே.பொ.க. சார்பில் அண்ணா நகரில் பொதுக் கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தோழர் இரா.சு. முனியாண்டி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தோழர் பெ. மணியரசன் (பொதுச் செயலாளர், த.தே.பொ.க.) சிறப்புரை யாற்றினார். மற்றும் தோழர்கள் க. பழநிமாணிக்கம்( மாவட்டச் செயலாளர், த.தே. பொ.க.), பழ இராசேந்திரன் (நகரச் செயலாளர், த.தே.பொ.க.), நா. வைகறை, ப. சந்திரசேகர், தே. மதியழகன் மு. கரிகாலன், த. தமிழ் மாறன் அ. வேலாயுதம் ஆகியோர் உரையாற்றினார்கள். தன்னுரிமைத் தீர்மானங்களை விளக்கும் வகையில் தமிழக மாணவர் முன்னணி தோழர்களின் சிறப்பான நாடகம் நடைபெற்றது.

### பூதலூர்

பூதலூர் ஒன்றிய த.தே.பொ.க சார்பில் பிப்ரவரி 27-ல் தன்னுரிமை நாள் பொதுக் கூட்டம் பூதலூர் கடைத் தெருவில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தோழர் அருள்தாஸ் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தோழர்கள் பெ. மணியரசன், க. பழநிமாணிக்கம், அ. சண்முகம்( ஒன்றியச் செயலாளர்) குழ. பால்ராசு ஆகியோர் சிறப்புரையாற்றினர்.



படிப்பகம்

www.padippakam.com

# பா.ஜ.க.வின் மோசடி வரவு-செலவுத் திட்டம்

- வடமலை

மக்கள் மீது கூடுதல் வரிச் சுமை, மாநிலங்களின் வரிவருவாய்ப் பங்கில் வெட்டு, வெற்று அறிவிப்புகள் மோசடிக் கணக்குகள் ஆகியவற்றின் கூட்டுத் தொகைதான் பா.ஜ.க. அரசின் வரவு-செலவுத் திட்டம்.

நிதியமைச்சர் யஸ்வந்த் சின்ஹா முன்வைத்துள்ள 1999 -2000 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ 9334 கோடிக்கு கூடுதல் வரி விதிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னதாக ரயில்வேக் கட்டண உயர்வால் சுமத்தப்பட்டுள்ள ரூ.900 கோடிக்கு மேல் இந்த சுமையும் ஏற்றப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

உலகச் சந்தையில் பெட்ரோலியத்தின் விலை குறைந்து வரும் இக்காலத்தில் டீசல் விலையை லிட்டருக்கு ஒரு ரூபாய் உயர்த்தி உள்ளது தில்லி அரசு. ரயில்வே சரக்கு கட்டணத்தில் உயர்வு அறிவிக்கும் போது எவ்வளவு மோசமான காலத்திலும் அரிசி, உப்பு, சர்க்கரை, கோதுமை ஆகியவற்றுக்கான கட்டணங்கள் உயர்த்தப்பட்டதில்லை. ஆனால் பா.ஜ.க. அரசு இந்த விதிவிலக்கை கைவிட்டு எல்லா பொருட்களின் சரக்கு கட்டணத்தையும் கண்ணைமூடிக்கொண்டு உயர்த்தி விட்டது. அஞ்சல் கட்டணங்கள் உயர்த்தப் பட்டுள்ளன.

இவையெல்லாம் சேர்ந்து கடும் விலையேற்றத்தையே உருவாக்கப் போகின்றன.

வரிவருமானங்களில் மிகப் பெரும்பாலான பகுதி நேரடி விலை ஏற்றத்தின் மூலமும் மேல் வரி (சர்-சார்ஜ்) மூலமும் மட்டுமே திரட்டப்படுகிறது. மேல் வரியிலும், நேரடி விலையேற்ற வருமானத்திலும் மாநிங்களுக்கு பங்கு கிடையாது என்று அரசமைப்புச் சட்டம் கூறுகிறது. யஸ்வந்த் சின்கா வருமானவரி மேல் வரி (Income Tax Surcharge) யாக 10% ம், நிறுவன மேல்வரியாக (Corporate Tax Surcharge) 10% ம், சுங்கத் தீர்வை மேல் வரியாக (Customs Surcharge) ரூ.1469 கோடியும் விதித்துள்ளார். இவை தவிர டீசல் விலை உயர்வு வேறு.

இந்த வருமானம் எதிலும் மாநிலங்களுக்குப் பங்கு கிடைக்காது. மாநிலங்களுக்கான வருமானப் பங்கும், திட்டமல்லாத நிதி உதவியும் சேர்த்து சென்ற ஆண்டு 20% ஆக இருந்தது. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 16% ஆக குறைக்கப்பட்டுள்ளது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தை தொடர்ந்து சேம வங்கி (ரிசர்வ் வங்கி) ஒரு அறிவிப்பைச் செய்துள்ளது. அதன்படி எந்த மாநில அரசும் தொடர்ந்து பத்து நாட்களுக்கு மேல் 'ஓவர் -டிராப்ட்' வாங்கக் கூடாது.

வரி வருமானத்தில் பங்கையும் வெட்டி, கடன் உதவியையும் நிறுத்தி 'மாநில ' அரசுகளை மிகப் பெரும் நிதி நெருக்கடியில் தள்ள முனைந்துள்ளது தில்லி அரசு.

மொத்த வருவாயில் 27% வட்டி கட்டுவதற்கே ஒதுக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் திட்டச் செலவுக்கான ஒதுக்கீடு சென்ற ஆண்டை விட ரூ.5000 கோடி குறைக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு வரவு செலவு திட்டத்தை முன்வைத்தபோது மின்சாரம், போக்குவரத்து, தகவல் தொடர்பு ஆகிய கட்டமைப்புத் துறைகளுக்கு 35% வருவாய் ஒதுக்கப்படுவதாக அறிவித்தார் நிதியமைச்சர் சின்ஹா. ஆனால் 15% அளவே இத்துறைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டது. அதை வைத்துப் பார்த்தால் இந்த நிதியாண்டில் திட்டச் செலவு மேலும் குறையும் ஆபத்து உண்டு என்பதை உணரலாம்.

இன்னொரு பக்கம் பன்னாட்டு முதலாளிகளின் மூலதனக் குவியலுக்கு வழி திறந்து விடப்பட்டுள்ளது. நேரடி வெளிநாட்டு முதலீடுகளில் 75% வரையிலும் தானாக இசைவு வழங்கும் (Automatic approval ) திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவற்றுக்கு கடன் திரட்ட வாய்ப்பாக வட்டி விகிதம் 1% குறைக்கப்பட்டுள்ளது.

இவற்றின் விளைவாக நிறுவனங்களின்



படிப்பகம்

www.padippakam.com

இணைவுகள் (Mergers), பங்குக் குவிப்புகள் (Acquisition) அதிகரிக்குமே தவிர புதிய தொழிற்சாலைகள் வராது.

திட்டச் செலவுகள் குறைவதாலும் அரசுத் துறைத் தொழில்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கைவிடப் படுவதாலும் அரசு துறை வேலைவாய்ப்புகள் சுருங்கு கின்றன. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் தானே முன் வந்து ஓய்வு பெறுவோருக்கான நிதிப் பத்திரத் திட்டத்தை அறிவித்துள்ளார் சின்ஹா. இருக்கிற நிறுவனங்கள் இணைகிற போது அங்குள்ள வேலை வாய்ப்பும் குறையும்.

மொத்தத்தில் வேலை வாய்ப்பைப் பறிக்கிற பட்ஜெட்டாகவே இது உள்ளது.

ஒரு ரூபாய்கூட நிதி ஒதுக்காமல் பலநூறு கோடி ரூபாய்க்கான 'நலத் திட்டத்தை' வெறும் அறிவிப்பாக செய்துள்ளார் யஸ்வந்த் சின்ஹா. நாடெங்கிலும் 1,80,000 புதிய தொடக்கப்பள்ளிகள் திறக்கப் படும் என்றும் இதற்கான செலவில் 50% ஐ இந்திய அரசு ஏற்கும் என்றும் தனது உரையில் பா.ஜ.க.வினரின் பெரும் ஆரவாரத்திற்கிடையே அறிவித்தார் அவர். அதாவது பண அளவில் 90,000 பள்ளிகள் கட்டவும் ஆசிரியர்கள் நியமிக்கவும் ஆகும் செலவை தில்லி ஏற்பதாகப் பொருள். ஆனால், இவ்வளவு பெரிய திட்டத்திற்கு ஒரு ரூபாய் கூட பட்ஜெட்டில் ஒதுக்கவில்லை.

அதே போல், வயது முதிர்ந்தோருக்கு மாதம் 10 கிலோ அரிசி இலவசமாக வழங்குவதாகவும் அதற்குப் பெயர் 'அன்னபூர்ணா திட்டம்' என்றும் கூறினார். இதற்கும் நிதி ஏற்பாடு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இல்லை.

ஊரறிய, சட்டமன்றத்தில் வெற்றுத் திட்டங்களை அறிவிப்பது; அதற்கு எந்த நிதியும் ஒதுக்காமல் இருப்பது என்பதை ஜெயலலிதா ஆட்சியில் பார்த்திருக்கிறோம். இந்த மோசடி அரசியலின் பரிணாம வளர்ச்சியாக வாஜ்பாய் ஆட்சி உள்ளது.

தில்லி நிதியமைச்சரின் அடுத்த மோசடி முயற்சி நிதிப்பற்றாக் குறை பற்றிய அவரது கணக்கீடு.

சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை முன் வைக்கிற போது நிதிப் பற்றாக்குறை 5.6% G.D.P. ஆக.இருக்கும் என்று சின்ஹா அறிவித்தார். (G.D.P. Grand domestic Product - மொத்த உள்நாட்டு உற்பத்தி) ஆனால் திட்டச் செலவில் செலவாகாத ரூ.16,705 கோடியை எடுத்துக் கொண்ட பின்னும்.அரசுத் துறை நிறுவனப்பங்கு விற்பனையில் ரூ8,500 கோடி கிடைத்த பின்னும், உலகச் சந்தையில் எண்ணெய் விலை சரிந்ததால் மிச்சமான ரூ.20,000 கோடி கிடைத்த பின்னும் இந்த பற்றாக்குறை 6.5% G.D.P யாக உயர்ந்தது.

அப்படியிருக்க இந்த ஆண்டு நிதிப் பற்றாக் குறை 4.4% ஆகக் குறையும் என எதை வைத்து யஸ்வந்த் சின்ஹா அறிவிக்கிறார்? சிறு சேமிப்புக் கணக்கில் மாநிலங்களுக்குக் கொடுக்கும் ரூ.25,000 கோடியை செலவுக் கணக்கில் காட்டாமல் மாற்றி. நிதிப் பற்றாக்குறை குறையும் என்று படம் காட்டுகிறார்.

இது பொருளாதாரச் சிக்கலில் உண்மை நிலையை எடுத்துக் காட்டாமல் மறைக்கும் மோசடி முயற்சியாகும்.

ஆக, பா.ஜ.க. அரசின் இந்த வரவு-செலவுத் திட்டம் சில பத்திரிகைகள் வர்ணிப்பது போல் 'மென்மையான' திட்டமல்ல. மாறாக மக்களை வதைக்கிற 'மாநில'ங்களை நெருக்குகிற மோசடி நிறைந்த வன்மையான வரவு-செலவுத் திட்டமே ஆகும்.

### *மண விழா*

*மயிலம் த.இ.மு. தோழர் த. சக்தி வேலுவுக்கும் தோழியர் த. சரோஜாவுக்கும் திருமணம் தமிழரசி திருமண நிலையத்தில் 10.2.99 புதன் அன்று பேரா. பா. கல்யாணி தலைமையில், ஆசிரியர் மு. கந்தசாமி முன்னிலையில் நடைபெற்றது.*

*தமிழர் கண்ணோட்டம் வளர்ச்சி நிதியாக ரூ.250/- வழங்கினர். மணமக்களுக்கு தமிழர் கண்ணோட்டம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.*



படிப்பகம்

www.padippakam.com

# அயர்லாந்து விடுதலைப் போராட்டம்-4

- எஸ்.வி. ராஜ துரை

## மார்க்ஸ் - ஏங்கல்ஸ் நிலைப்பாடுகள்

அயர்லாந்துப் பிரச்சனையில் மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோர் மேற்கொண்ட நிலைப்பாடுகளைக் காணும் முன், தேசியப் பிரச்சனை குறித்த அவர்களது தொடக்க காலக் கருத்துகளைச் சற்று விரிவாகக் காண வேண்டும்.

தேசியம் (Nationalism) என்பது மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோரின் அக்கறைகளுக்குட்பட்ட மையமான விஷயங்களில்லொன்றாக இருக்கவில்லை. அது அவர்களது அக்கறைகளின் விளிம்பு நிலையில் தான் இருந்தது. தேசம் (Nation), தேசிய இனம்(Nationality) ஆகியவற்றை முறையே 'இறையாண்மையுடைய ஒரு மக்கள்', ஒரு மொழியும் பொதுவான பின்னணியும் கொண்ட ஆனால் தமக்கென ஒரு அரசு இல்லாத மக்கள் என்ற பொருளிலேயே வழங்கிவந்தனர். தேசியம் என்பதைத் தாய் நாட்டைப் போற்றிப் புகழுதல், பிறந்த மண்ணுக்கு விசுவாசமாக இருத்தல் என்ற பொருளில் பயன்படுத்தினர். தேசம், தேசிய இனம், தேசியம் ஆகியவற்றுக்கான கோட்பாட்டு விளக்கங்கள் எதனையும் அவர்கள் உருவாக்கவில்லை. தொழிலாளிகளின் 'தேசிய அளவிலான' போராட்டத்தை அவர்கள் ஆதரித்தனர். ஆனால் தேசிய இனங்களின் போராட்டத்திற்கு அவர்கள் ஒப்புதல் தரவில்லை. பாட்டாளி வர்க்கம், தனித்தனி மையங்களில் பல போராட்டங்களை நடத்தாமல், தேசிய அளவில் ஒருங்கிணைத்த தனது போராட்டத்தை நடத்தினால்தான் வெற்றியடைய முடியும் என்று அவர்கள் 'கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில்' கூறினர். அந்த 'தேசிய அளவிலான போராட்டத்தை' வர்க்கப் போராட்டமாக அவர்கள் பார்த்தனர். அந்த வடிவத்தில் மட்டுமே அதற்கு ஒப்புதல் தந்தனர்.

சமுதாய வரலாற்றை விளக்குவதற்கு 'வர்க்கம்' என்ற கருத்தாக்கத்தை முதன்மைப் படுத்திய அவர்கள் நவீன தேச அரசு (Modern Nation - State) அங்கு பாட்டாளிவர்க்கம் என்ற ஒரே ஒரு வர்க்கம் மட்டுமே எஞ்சி நிற்கும். அவ்வர்க்கத்தின் மேலாண்மையானது "வெவ்வேறு நாடுகளது மக்களுக்கும் இடையிலுள்ள தேசிய வேறுபாடுகளும் பகைமைகளும் .....மேலும் துரிதமாய் மறையச் செய்யும்" [79]

"பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்கு வேண்டிய தலையாய நிபந்தனைகளிலொன்று" என 'அறிக்கை' குறிப்பிடுவது "குறைந்தது தலைமையான நாகரிக நாடுகளின் அளவிலாவது அமைந்த செயல் ஒற்றுமை" [80] ஆகும். 'தலைமையான நாகரிக நாடுகள்' என்று மார்க்ஸ், ஏங்கல்ஸ் இங்கு குறிப்பிடுவது வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளாகும். அறிக்கையின் அறை கூவல் 'அனைத்து நாட்டுத் தொழிலாளர்களே ஒன்று படுக' என்பதுதானேயன்றி 'அனைத்துத் தேசங்களின் தொழிலாளர்களே ஒன்று படுக' என்பதல்ல. எப்படியிருப்பினும் மார்க்சும், ஏங்கல்சும் 'தேசம்' என்ற சொல்லிற்குக் கொண்டிருந்த பொருள், இன்று மார்க்சிய வட்டாரங்களில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் வரைவிலக்கணம் கூறும் பொருளில் அல்ல.

இதுவரை நாம் கூறியவற்றிலிருந்து, தேசியப் பிரச்சனை குறித்து மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோர் தொடக்க காலத்தில் கூறிய கருத்துகள் முற்றிலும் சரியானவையே என்ற முடிவுக்கு வந்து விடக் கூடாது. மாறாக, தேசம், தேச-அரசு பற்றியும் வர்க்கப் போராட்டத்தில் அவற்றிற்குள்ள பாத்திரம் பற்றியும் மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோர் எழுதியவற்றை விமர்சன நோக்கில் படித்துப் புரிந்து கொள்ள வேண்டும் என்பது பூர்ஷ்வா வர்க்கத்தின் எழுச்சியின் காரணமாக உருவாயிற்று என்றும் அந்த வர்க்கம் தூக்கியெறியப்படும்போது தேசமும் மறையும் என்று கருதினர். 1845இல் எழுதப்பட்ட 'இலண்டனில் தேசங்களின் திருவிழா' என்ற கட்டுரையில் ஏங்கல்ஸ், பூர்ஷ்வா வர்க்கத்திற்கு மட்டுமே தனித்தனி நாடுகளை



படிப்பகம்

www.padippakam.com

வைத்துக் கொள்வதற்கான அக்கறை இருக்கிறதே தவிர பாட்டாளி வர்க்கத்திற்கு அல்ல. கம்யூனிச ஜனநாயகத்தின் கீழ் உண்மையான சகோதரத்துவத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ள அனைத்து நாட்டுப் பாட்டாளிகளுக்கு தேசிய உணர்வுகள் ஏதும் கிடையாது என்று எழுதினர்.[77]

'கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை' கூறுவதாவது: "...பாட்டாளி வர்க்கம் யாவற்றுக்கும் முதலாய் அரசியல் மேலாண்மை பெற்றாக வேண்டும். தேசத்தின் தலைமை வர்க்கமாக உயர்ந்தாக வேண்டும். தன்னையே தேசமாக்கிக் கொள்ள வேண்டும். அந்த அளவிற்கு பாட்டாளிவர்க்கம் தேசியத் தன்மை கொண்டதாக இருக்கிறது. ஆனால் இச் சொல்லுக்குரிய பூர்ஷ்வா பொருளில் அல்ல" [78]

மார்க்சும் ஏங்கல்சும் இங்கு 'தேசம்' என்பதை இன்று மரபாக நமக்குத் தரப்படும் 'மார்க்சிய' (இன்னும் சரியாகச் சொல்லப்போனால் ஸ்டாலினிய) வரைவிலக்கணத்தின்படி பயன்படுத்தவில்லை. மாறாக தம் காலத்தில் நிலவிய ஐரோப்பிய தேச அரசுகளின் புவியெல்லைகளையே மனத்தில் கொண்டிருந்தனர். மேலும் அந்தப் புவியெல்லைகளைக் காப்பது அவர்களது அக்கறையாக இருக்கவில்லை. "பாட்டாளி வர்க்கம் தன்னையே ஒரு தேசமாக உயர்த்திக் கொள்ள வேண்டும்" என்பதன் பொருள், வர்க்கப் போராட்டத்தில் வெற்றியடைந்து, அரசியல் மேலாண்மையைப் பெற்று, பூர்ஷ்வா வர்க்கத்தை ஒரு வர்க்கம் என்ற முறையில் ஒழித்துக் கட்டுவாகும். அதன்பிறகு நிலப்பிரபுத்துவ உற்பத்திமுறை ஒழிக்கப்பட்டு முதலாளித்துவ உற்பத்தி முறை ஏற்படும் நிகழ்வுப் போக்கின் நேரடியான விளைவே 'நவீன தேசம்' (Modern Nation) என்று மார்க்சும் ஏங்கல்சும் கருதினர். நிலப்பிரபுத்துவத்திலிருந்து முதலாளித்துவத்திற்கு மாற்றம் ஏற்படும் காலகட்டத்தில் தோன்றும் 'நவீன தேசம்' முதலாளித்துவப் பொருளாதாரச் சூழலில் மட்டுமே நிலவ முடியும் என்பது அவர்கள் கருத்து. அவர்கள் மேலும் இது குறித்துக் கூறியவை கீழ்வருமாறு:

முதலாளித்துவ உற்பத்திமுறை ஏற்படும் கால கட்டத்தில், சிதறுண்டு கிடக்கும் நிலப்பிரபுத்துவச் சமுதாய நிலப்பரப்புகள் கருநிலையிலுள்ள நவீன அரசின் (Modern States) பாதுகாப்பின் கீழ் மெல்ல மெல்ல ஒன்றிணைக்கப்படும். அப்பரப்புகள் ஒன்றிணைக்கப்படுவதன் காரணமாக அந்தந்த வட்டாரங்களின் தனித் தன்மைகள் ஒழிக்கப்பட்டு, நாட்டுமக்கள் அனைவரும் ஒரு பொதுத்தன்மை பெறுவர். அது சந்தையின் உருவாக்கத்திற்கும் முதலாளித்துவம் நிலைபெறுதவதற்கும் வேண்டிய ஒரு முக்கியமான நிபந்தனையாகும். அவ்வாறு ஒன்றிணைக்கப்படும் நிலப்பரப்புகளில் உழைப்பின் பிரிவினை ஆழமும் விரிவுமடைவதும் பல்வேறு உற்பத்தி அலகுகள் ஒன்றையொன்று சார்ந்திருக்கும் நிலை வளர்ச்சியடைவதும் முதலாளித்துவத்திற்கு இன்றியமையாதவை. இதைச் சாத்தியப்படுத்தவும் குறிப்பிட்ட அடையாளத்தையும் பரப்பையும் கொண்டுள்ள ஒரு சந்தையை உருவாக்கி, குறிப்பிட்ட அடையாளமுள்ள பண்பாட்டு, அரசியல் அலகுகளை வலுப்படுத்தி அவற்றை ஒருங்கு சேர்ப்பதற்கும் நவீன ஐரோப்பிய மொழிகள் தோன்றின. இந்த சந்தையின் பரப்பையும் அரசியல், பண்பாட்டு அலகுகளின் பரப்பையும் எல்லையையும் புதிதாக உருவாகி வரும் 'நவீன அரசே' வரையறை செய்கிறது.

மேற்கு ஐரோப்பாவில்- குறிப்பாக பிரான்சிலும் இங்கிலாந்திலும் ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றிய அவதானிப்புகளிலிருந்தே மார்க்சும் ஏங்கல்சும் தேச உருவாக்கம் பற்றிய மேற்சொன்ன கருத்துகளை வகுத்துக் கொண்டனர். தேச உருவாக்கம் பற்றிய அவர்களது புரிதலில், எல்லாவற்றுக்கும் மேலாக, பிரெஞ்சுப் புரட்சியின் இலட்சியங்களே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. அப்புரட்சியை அடுத்து உருவாக்கப்பட்ட நவீன பிரெஞ்சு தேசத்தையே, உலகின் பிற வளர்ச்சி குன்றிய பகுதிகளில் தேசங்களின் உருவாக்கத்திற்கான முன்மாதிரியாக அவர்கள் கருதினர். பிரெஞ்சுப் புரட்சியை நடத்திய ஜேகோபின்களும் பிற புரட்சியாளர்களும், ஒரு ஜனநாயக அரசை உருவாக்குவதற்கான மிகச் சிறந்த வழி, இறுக்கமாக மையப்படுத்தப்பட்ட அதிகாரமும் நாடு முழுவதற்கும் பொதுவான ஒரேபடித்தான மொழியைப் பயன்படுத்துவம் ஆகும் என்று கருதினர். பிரெஞ்சுப் புரட்சியின் இலட்சியங்களும் கருத்தியலுமே பிரெஞ்சு மக்களின் ஒற்றுமையை உருவாக்கிய முதல் நவீன தேசிய இயக்கத்திற்குக் காரணமாக இருந்தன என்பது வழக்கமாகச் சொல்லப்பட்டு வரும் கூற்றாகும். ஆனால் பிரெஞ்சு தேச அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வந்த நிலப்பகுதிகளில் பல்வேறு மொழிகள் பேசப்பட்டு வந்தன. நவ- இலத்தீன் மொழிகள், கெல்ட்டிக் மொழிகள், இலத்தீனுக்கு முந்திய மொழிகள் ஆகியன



படிப்பகம்

www.padippakam.com

இவற்றிலடங்கும். பிரெஞ்சு மொழியும் கூட மத்திய காலத்தில் ஒரே மொழியாக இருக்க வில்லை. வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபட்ட பல்வேறு 'பிரெஞ்சு மொழிகள்' இருந்தன. புரட்சி நடப்பதற்குச் சிறிது காலத்திற்கு முன்புதான் பாரிஸ் நகரில் பேசப்பட்டு வந்த 'பிரெஞ்சு மொழி' தனது மேலாண்மையைச் செலுத்தத் தொடங்கியது. அது பின்னர் மெல்ல மெல்ல அரசின் ஆட்சி மொழியாயிற்று. எல்லாக் குடிமக்களுக்கும் ஒரே மொழியைக் கொண்ட ஒரே சீரரன தேச அரசை உருவாக்க விரும்பிய புரட்சி அரசாங்கத்தின் கொள்கைகளால் பாரிஸ் வட்டாரத்தில் பேசப்பட்டுவந்த பிரெஞ்சு மொழி **(Parisian French)** ஆட்சி மொழியாயிற்று. அரசு கல்வித் திட்டத்தின் வழியாக பிற இன மக்களின் மொழிக் குடும்பங்களையும் பாரிஸ் பிரெஞ்சு மொழி ஊடுருவியது. கணிசமான மக்கள் அந்த மொழியைப் பேசத் தெரியாதவர்களாக இருந்ததால் 1791 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபை அதனை முனைப்புடன் பரப்பவும் பயன்படுத்தவும் முடிவு செய்தது. புரட்சியாளர்கள் ஒரு மையப்படுத்தப்பட்ட அதிகாரமுள்ள, ஜனநாயக அரசை உருவாக்கவும் நாட்டில் ஆங்காங்கே இருந்த பிரபுக் குலத்தினரின் எதிர்ப்பை முறியடித்து பாரிஸ் நகர பூர்ஷ்வாக்களின் மேலாட்சியை உத்திரவாதம் செய்யவும் விரும்பியதே இதற்குக் காரணமாகும்.

பாரிஸ் நகரப் பிரெஞ்சு மொழியும் புரட்சியின் குறிக்கோள்களும் இவ்வாறு ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டிருந்ததால் அம் மொழி பேசப்படாத இடங்களில் எதிர்ப்புரட்சி மிக வலுவாக இருந்தது வியப்புக்குரியதல்ல. மிக இறுக்கமாக மையப்படுத்தப்பட்ட அரசு, பாரிஸ் நரகம் பிரெஞ்சு மொழியைப் பேசாத தேசிய இனச் சமூகங்களின் நிர்வாக, பண்பாட்டுச் சுயாட்சியை ஒழித்துக் கட்டியது. அச்சமூகங்களின் பண்பாடும் மொழிகளும் அநேகமாக முற்றாக அழிக்கப்பட்டன. ஒடுக்கப்பட்ட அந்த இனங்களின் வெறுப்பும் பகைமையும் பாரிஸ் நகரப் பூர்ஷ்வாக்கள் மீது அதிகரித்து வந்தது. அவர்கள் எதிர்ப் புரட்சியாளர்களின் அணிகளில் சேர்ந்து கொண்டனர். ஜேகோபின் புரட்சியாளர்களோ, அந்த மக்களின் பண்பாட்டு வேட்கைகள், தேசிய அடையாளங்கள் ஆகியவற்றின் மீது அனுதாபமோ கரிசனமோ காட்டாமல் அவர்களை எதிர்ப்புரட்சியாளர்களாகவே அடையாளப்படுத்தினர். எதிர்ப்புரட்சி முகாமுக்குள் அவர்களைத் தள்ளினர்.[81]

எனினும் மார்க்சும் ஏங்கல்சும் மையப்படுத்தப்பட்ட அரசு அதிகாரம், தேசிய் ஐக்கியம், சிறு தேசிய சமூகங்களை தேச அரசிற்குள் உட்கிரகித்தல் ஆகியன மட்டுமே சமூதாய முன்னேற்றத்திற்கு இட்டுச் செல்லக்கூடிய ஒரே வழி எனக் கருதினர்.

பெரிய, மையப்படுத்தப்பட்ட அரசுகள் சமூக வளர்ச்சிக்குப் பயன்படுபவை என்று கருதிய அவர்கள், தேசியப் பிரச்சனை பற்றிய தமது சிந்தனைக்கு அவற்றையே அடிப்படையாகக் கொள்ளவும் செய்தனர். அதற்கான காரணங்களை, குடிமைச் சமுதாயம் **(Civil Society)** தேச அரசு, வரலாறுடைய தேசம், வரலாறற்ற தேசம் ஆகியன பற்றிய அவர்களது விளக்கங்களிலிருந்தும் விவாதங்களிலும் காணலாம்.

குடிமைச் சமுதாயம் பற்றிய ஹெகலியக் கருத்தை மறுவரையறை செய்த மார்க்ஸ் கூறியதாவது: உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் ஒரு திட்டவட்டமான கட்டத்தில்தான் குடிமைச் சமுதாயத்தைக் காணமுடியும்; குடிமைச் சமுதாயத்தில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், உற்பத்திச் சாதனங்களை உடைமையாகக் கொண்டோர், உடமை இல்லாதவர் ஆகியோருக் கிடையிலான முரண்பாடுகள் ஆகியன உள்ளன. இங்கு பொருளாதார விடுதலை பெரும்பாலானோர்க்கு இல்லை. பூர்ஷ்வா அரசு, குடிமைச் சமுதாயத்தில் உள்ள அனைவருக்கும் அரசியல் விடுதலை வழங்குவ தன் மூலம் (அனைவருக்கும் வாக்குரிமை, சட்டத்திற்கு முன் அனைவரும் சமம், அரசு இறையாண்மையில் எல்லார்க்கும் சம பங்கு, அனைவருக்கும் சரிசமமான அரசியல் உரிமை) இந்த முரண்பாடுகளைக் கடக்க முயல்கிறது. ஆனால் இந்த அரசு தனியுடைமை நலன்களைப் பாதுகாப்பதால் குடிமைச் சமுதாயத்திலுள்ள முரண்பாடுகளைத் தீர்க்கவோ அல்லது அவற்றைக் கடந்து வரவோ இயலாது. மாறாக அது, குடிமைச் சமுதாயத்திலுள்ள மேலாதிக்கச் சக்திகளின் பிரதிபலிப்பாகவே இருக்க முடியும். குடிமைச் சமுதாயத்தின் பொது வடிவம், அரசு, தேசம் என்ற இரண்டு குறிப்பிட்ட திட்ட வட்டமான வடிவங்களிலும் நிலவுவதால் குடிமைச் சமுதாயம் என்பது அதனுள் இருக்கும் மேலாதிக்கச் சக்திகளின் பிரதிபலிப்பாகத்தான் இருக்க முடியும். எனவே முதலாளித்துவ உற்பத்தி முறையில், குடிமைச்



படிப்பகம்

www.padippakam.com

சமுதாயத்தின் வடிவம், உள்ளடக்கம் ஆகியவற்றை நிர்ணயிக்கிற பூர்ஷ்வா வர்க்கமே மேலாண்மை வர்க்கமாக விளங்குகிறது.

__குறிப்புகள்__

77. Karl Marx/Frederich Engels
Collected works Vol.6. (1845-1848),
Progress Publishers, Moscow, 1976
pp 5-8.
78. மார்க்ஸ், எங்கல்ஸ்
கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை,
முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1975,
ப.74
79. அதே நூல்
ப.74
80. அதே நூல்
ப.74
81. Ephraim Nimni
Great Historical Failure: Marxist theories of Nationalism in Capital and Class,
No.25,Spring 1985, pp 59-62.

## திண்டிவனத்தில் காப்பியடிக்கும் கலாச்சாரத்தை எதிர்த்தும் கல்வித் தரத்தை உயர்த்தவும் பட்டினிப் போராட்டம்

திண்டிவனம் 25.2.99 மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தேர்வு சீர்திருத்த கூட்டமைப்பு சார்பில் ஒரு நாள் பட்டினிப் போராட்டம் வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் ஆசிரியர் இரா. கருப்பையன் தலைமையில் நடைபெற்றது. போராட்டத்தை திரு.எ. சாமுவேல் அகஸ்டீன் துவக்கி வைத்து உரையாற்றினார்.

ஆசிரியர்கள் மு. கந்தசாமி, மோகன், மணி, ஸ்ரீதர், குப்புசாமி, வழக்கறிஞர்கள் த. பவணந்தி, அரசாங்கு, லாரன்ஸ், ஊழியர் அம்பலவானன், அரசியல் அமைப்புக்கள் சார்ந்து க.மு. தாஸ்(தி.க.) தோழர் இராசேந்திர சோழன் (த.தே.பொ.க.) பேரா. பா. கல்யாணி(ம.க.இ.) ஆகியோர் விளக்கவுரையும், வாழ்த்துரையும் வழங்கினர்.

பேராசிரியர் ஐ. இரகமதுல்லா கான் போராட்டத்தை முடித்து வைத்து உரையாற்ற தி. அ. நசீர் அகம்மது நன்றி கூறினார்.

## நாடக விழா கருத்தரங்கு

சென்னை பிப்.22-23 உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சார்பில் இங்கு 'நாடக விழா மற்றும் தமிழ் மேடை நாடக வரலாறு' கருத்தரங்கு இரண்டு நாட்கள் நடைபெற்றது.

முதல் நாள் கருத்தரங்கில் முனைவர் கே. ஏ. குணசேகரன், வீ. அரசு, செ. உலகநாதன், பத்மநாபன் முதலானோரும், இரண்டாம் நாள் கருத்தரங்கில் எஸ்.வி.எஸ். குமார், ராதாரவி அஸ்வகோஷ் முதலானோரும் நாடக முன்னோடிக் கலைஞர்கள் குறித்து கட்டுரை வாசித்தார்கள்.

முதல்நாள் பெர்டோல்ட் பிரக்டின் கலிலியோ நாடகம் முனைவர் மு. இராமசாமியின் நெறியாள்கையிலும் இரண்டாம் நாள் முனைவர் இன்குலாபின் தடி நாடகம் முனைவர் அ. மங்கையின் நெறியாள்கையிலும் நிகழ்த்திக் காட்டப் பெற்றது.

நிறைவு நிகழ்ச்சியில் முனைவர் ஏ.என் பெருமாள் தலைமையில் நடிகமணி பி.வி நாராயண சாமி திராவிட இயக்கக் கலைஞர்கள பற்றி உரை நிகழ்த்த தியோடர் பாஸ்கரன் தலைமையில் பேராசிரியர் கா. சிவத்தம்பி சிறப்புரையாற்றினார். முனைவர் பகவதி நன்றி கூறினார்.

## மதவெறி எதிர்ப்புப் பொதுக்கூட்டம்

பா.ஜ.க. அரசின் சிறுபான்மை மக்களுக்கு எதிரான செயலைக் கண்டித்து பிப்ரவரி 17 நெய்வேலியில் மதவெறி எதிர்ப்புப் பொதுக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. தோழர் நாராயண சாமி(SUCI) தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தோழர்கள் அனவரதன்(SUCI), ஜவகர் மோகன்(BSP) செயராமன்(தி.க.) நா.வைகறை (த.தே.பொ.க.), செல்வராசு (CPI(ML)), இரமேசு (த.இ.மு) ஜவகர்(அம்பேத்கர் சமூக இயக்கம்) அமிர்தலிங்கம்(அம்பேத்கர் தொழிற்சங்கம்) லெனின்(தமிழகப் புரட்சி இயக்கம்) ஆகியோர் உரையாற்றினார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# எழுத்துச் சீர்மை
# (உகர, ஊகாரம்)

- க. குழந்தைவேலன்
சொல்லியல் ஆய்வாளர்.

அறிவியல் ஊழியின் விரைந்த வளர்ச்சிக்கேற்ப நாம் ஈடுகொடுத்து வளர இயலாமைக்கு நமது தமிழ் எழுத்துக்களின் பெருந்தொகையே காரணமாகக் கூறப்படுகிறது. இக்குறை நீண்ட காலமாகப் பேசப்பட்டு வருவதொன்றே. பல தமிழ் அறிஞர்களும், ஆய்வாளர்களும் தத்தமக்கேற்ற வகையில் பல தீர்வுகளைக் கூறிவந்துள்ளனர். கூறியும் வருகின்றனர். அவற்றுள் ஒன்று கூட அனைவராலும் இதுவரை ஒருமித்த கருத்தோடு ஒப்புக் கொள்ளப்படவில்லை.

நீண்ட நெடிய மரபு வழியில் பரவலாகப் பழகிப் பயின்று வந்த ஒன்றை விரைவில் தூக்கி எறியத் தயங்குவதே இதற்குக் காரணம். இத்தகைய மரபுவழித் தயக்கங்களே இனச்சிதைவையும், மொழிச் சிதைவையும் தடுத்து நிறுத்தியுள்ளதை வரலாறு காட்டுகிறது. மரபு வழிப்பட்ட ஒன்றை, மரபு வழியிலான மருந்தைக் கொண்டே தீர்வு செய்தல் வேண்டும். எழுத்துச் சீர்மையில் அத்தகையதொரு மரவு வழி மருந்தைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கை மிகுதி என்ற கருத்தே ஆய்வுக்குரிய ஒன்று. மேலெழுந்த வாரியாகப் பார்க்கின் நமது எழுத்துக்கள் பெருந்தொகை போன்றதொரு தோற்றத்தை அளிக்கிறது. ஆனால், உண்மையில் நமது எழுத்துக்கள் பெருந்தொகையான தன்று. அறிவியல், தொழிலியலின் முன்னேறிய, முன்னேறிவரும் உலக நாடுகளின் எழுத்துக்களோடு ஒப்பிடும் போதுதான் நாம் எதைக் குறை எனக் கூறுகின்றோமோ அதுவே நிறைவாகத் தோன்றும்.

அறிவியல், தொழிலியல், வணிகம் ஆகிய துறைகளில் கொடிகட்டிப்பறக்கும் முன்னேறிய நாடுகள் எவையும் மலையளவு சிக்கலான தமது எழுத்துக்களை தமது முன்னேற்றத்துக்குத் தடை என்று புலம்பிக் கொண்டு தயங்கி நிற்கவில்லை. அவர்கள் நமது இனம், நமது நாடு , நமது மொழி என்ற பற்றோடும், பாசத்தோடும் முந்தி நிற்க வேண்டும் என்று அயராது உழைக்கின்றனர். எழுத்தாளரும், பல நாடுகளோடு தொடர்பு கொண்ட கணினி வல்லுநருமான சுசாதா (அரங்கராசன்) கூறுவது போல இடியாப்பச் சிக்கலைப் போல சிக்கலான எழுத்துக்களைச் சிக்கலெனக் கருதாது அறிவியல் புரட்சி செய்துள்ளனர். நாமோ நமது பற்றின்மை, முயற்சி இன்மை, ஆள்வினை இன்மையை மறைக்க மொழி, எழுத்துக்களின் மீதும், தலையெழுத்துக்களின் மீதும் பழி சுமத்தி தற்காப்பு தேடுவதிலேயே கருத்தாக இருக்கின்றோம். அதனால் குறையற்றதும் குறையாகவே தோன்றுகின்றது. முதலில் நமது மாயையை அகற்ற வேண்டும்.

மாந்த முயற்சியின் விளைவே எழுத்துக்களின் ஆக்கம். உள்ளத்திலிருந்து எழுகின்ற உணர்வுகளைப் பிறருக்கு அறிவிக்க முதலில் உருவங்களை - ஓவியங்களாக வரைந்து காட்டினர். அவ்வோவியங்கள் அல்லது சித்திரங்கள் ஓவிய எழுத்துக்களாகிக் கால வளர்ச்சியில் உருவை மட்டும் குறிக்காது கூறவந்த கருத்துக்களை உணர்த்தும் கருத்தெழுத்துக்களாக மாறின. உருவங்களை அல்லது கருத்துக்களை உணர்த்த எழுந்த ஒலிகளின் முன்னொலியே ஒலி எழுத்துக்களாகி நிலை பெற்றன. அவ்வாறு தோன்றிய எழுத்துக்களை அகரவரை (Alphabetic) எழுத்துக்கள் என்றும், உயிர்மெய்வகை (Syllabony) எழுத்துக்கள் என்றும் இரண்டாகப் பாகுபடுத்துவர். இவ்விரண்டில் உயிர்மெய் வகை எழுத்துக்களே முதன்மையும், தொன்மையும் வாய்ந்தன. அதனால் உயிர், மெய், உயிர்மெய் என்ற தனித்தனி ஒலிக்கேற்ப வரிவடிவங்கள் ஏற்பட்டன. உயிர்வகை அல்லது அகரவகை (Alphabetic) எழுத்துக்கள் பின் தோன்றியவை. உயிர் மெய் வகை எழுத்துக்களை விட எண்ணிக்கையில் குறைவானவை. இவற்றிலும் உயிர், மெய் என்ற பகுப்பு இருப்பினும்



படிப்பகம்

www.padippakam.com

உயிரும் மெய்யும் சேர்ந்தொலிக்கும் கூட்டொலிக்கு அஃதாவது உயிர்மெய்க்குத் தனி வரிவடிவு தோன்றவில்லை. எடுத்துக்காட்டாக க் + அ= க என்பது உயிர்மெய் வகை: K+a= Ka என்பது அகரவகை. மேலே உயிரும் மெய்யும், என தனித்தனி வரிவடிவு காட்டப்பட்டதால் மூன்று எழுத்தாகிறது. அகர வகையில் உயிர்வடிவம் மெய்வடிவம் தனித்தனியாக ஒலிக்கும் பொழுதும் சேர்ந்து ஒலிக்கும் பொழுதும் தனியொரு வடிவு இல்லாமல் இணைந்தே ஒலிக்கின்றனர். இதனால் உயிர்மெய் வகை எழுத்துக்கள் தோற்றத்தில் மிகையாகத் தோன்றுகின்றன.

தமிழ் எழுத்துக்களை மிகை என்றும், சிக்கல் என்றும் கூறுவதெல்லாம் நமது எளிமைக்காக ஏற்படுத்திக் கொண்ட வரிவடிவைத்தான். ஆங்கிலத்தில் எழுத்துக்களின் வரிவடிவம் இருபத்தாறு தான் என்றாலும் எழுதப்படும் நீட்டி மிகுதி. பெரிய எழுத்து சிறிய எழுத்து போன்ற பல சிக்கல்களும் ஒலிப்புச் சிக்கல்களும் மிகுதியாக உள்ளன. மேலும் அதில் பெரிய எழுத்து(தலையெழுத்து) (Capital Letters) சிறிய எழுத்து (Small Letters) என இருவகை எழுத்துக்களைப் பயன்படுத்துவதால் ஐம்பத்திரண்டு குறியீடுகள் அல்லது வரிவடிவங்கள் தேவைப்படுகின்றன. அதே நேரத்தில் நமது மூல ஒலிகளும், மூல வரிவடிவுகளும் ஆங்கிலத்தைவிடக் குறைவான முப்பது மட்டுமே. இதனைக் தொல்காப்பியம்.

எழுத்தெனப் படுப
அகர்முதல னகர விறுவாய்
முப்பஃ தென்ப (-தொல் எழு:1)

என வரையறுத்துக் கூறுதல் கூர்ந்து நோக்கற் பாலது.

தொல்காப்பியர் கூறுவது போல மெய்ம்மையில் தமிழின் அடிப்படை எழுத்துக்கள் உயிர் 12 மெய் 18 ஆக 30 எழுத்துக்களே. இவற்றின் வரி வடிவுகளும் முப்பதே. இவற்றைக் கொண்டு ஆங்கிலம் போன்ற அகர வகை எழுத்துக்களால் எழுதப்படுகின்ற அனைத்தையும் எழுதிவிட இயலும். எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தில் London என்பதைத் தமிழில் ல் அ ன் ட் அ ன் எனவும் Canada என்பதை க் அ, ன் அ, ட் ஆ எனவும் எழுதிவிட இயலும். அதேபோன்று தமிழிலும் படித்தான் என்பதைப் ப் அ ட் இ த் த் ஆ ன் என மூல எழுத்துக்களைக் கொண்டே எழுதவும் படிக்கவும் இயலும்.

எனினும் எழுத்துருவங்களின் எண்ணிக்கைப் பெருகி சொற்கள் நீட்சிப்பெருவதை தடுக்கவும் மெய்யையும் உயிரையும் தனித்தனியே கண்டு சேர்த்தொலிக்கும் சிக்கலைக் குறைக்கவும் வழி கண்டனர் பண்டைத் தமிழ்ச் சான்றோர். இதற்காக உயிர் எழுத்துக்களான தனித்தனிக் குறியீடுகளைப் படைத்துக்கொண்டு அவற்றை அடிப்படை மெய் வடிவுகளின் மீது ஒரே சீரொழுங்கு முறையில் பொருந்தி உயிர்மெய் வரிவடிவுகளை மிகமிக எளிமையாகக் கையாண்டனர்.[1] இன்று நாம் காணும் வடிவுகளைக் கொண்டு பார்க்கின் நமக்கு சற்று குழப்பமாகவே தோன்றும். இன்று நாம் காண்பவை 2000 ஆண்டுகளுக்கு மேலான வளர்சிதை மாற்றங்களின் பின்னணியில் உருப்பெற்றவையே. இந்த வளர்ச்சிதை மாற்றத்திற்கு உள்ளான எழுத்துக்களை கருத்தில் கொண்டு பின் வந்த உரை ஆசிரியர்களும் நன்னூலாரும் உயிர் 12, மெய் 18, உயிரும் மெய்யும் சேர்ந்த உயிர்மெய்ப் பெருக்கம் 216, ஆய்தம் 1 எனக் கூட்டி 247 என்று கூறிவிட்டனர் தொல்காப்பியர் காலத்தும் அதற்கு முன்பும் வழங்கிய எழுத்துக்களின் வரிவடிவுகளைக் காணின் அதன் அமைப்புத் திறனும் அதனை வடிவமைத்தார் அறிவுத்திறனும் வியக்க வைக்கின்றன. அவை மிகமிக எளியன. சீரொழுங்கின. சிக்கலற்றன.[2]

பண்டைய உயிரும் மெய்யும் சேர்ந்து ஒலித்த உயிர்மெய் எழுத்துக்களின் வரிவடிவங்களைத் தொல்காப்பியர்

மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்
- (தொல் எழுத்:15)
எகர ஒகரத் தியற்கையும் அற்றே (-) (தொல் எழுத்:16)
புள்ளி இல்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமோ டுயிர்த்தலும்
ஏனை யுருவோ டுருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீ ரியல வுயிர்த்த லாறே - (தொல் - எழுத்:17)

எனப் படம் பிடித்துக் காட்டினர். இதன்படி அகரம் ஏறிய எல்லா மெய் வடிவுகளும் புள்ளியை நீக்கி நின்று அகர மேறிய உயிர்மெய் எழுத்துக்களைக் குறிக்கும். (+, [, d - க, ங,ச) ஆகாரம் ஏறிய மெய் வடிவங்கள் அனைத்தும் நமது வலது மேல் பக்கத்தில் ஒரு சிறு கிடைக்கோட்டைப் பெறும். ( கா,ஙா, சா). இகர, ஈகாரம் ஏறிய மெய்எழுத்துக்கள், ஆகாரத்தைக் குறிக்க



படிப்பகம்

www.padippakam.com

வலது மேற் பக்கத்தில் இடப்பெற்ற சிறு கிடைக்கோட்டின் மீது முறையே ஒன்று இரண்டுமாக சிறு குத்துக்கோடுகளைப் பெறும் ( கி,ஙி,சி,கீ,ஙீ,சீ) உகர ஊகாரங்கள் ஏறிய மெய்யெழுத்துக்கள் தம் கீழ் வலப்பகுதியில் முறையே ஒன்றும் இரண்டுமான சிறு கிடைக்கோடுகளைப் பெறும்.( கு, கூ) வளைவான அடிப்பக்கத்தை உடைய எழுத்துக்களில் அவற்றின் கீழ்ப் பகுதியில் இக்குறிகள் தொங்குவது போலக் காட்டப் பெறும்.[4] ( நு, நூ,மு, மூ). எகர ஏகாரங்கள் ஏறிய மெய்யெழுத்துக்கள் தங்கள் இடது மேல் பக்கதில் ஒரு சிறிய கிடைக்கோட்டை முறையே புள்ளியுடனும் புள்ளியின்றியும் பெறும்.[5] ( கெ,கே.) ஐகாரம் ஏறிய மெய்எழுத்துக்கள் தமது இடது மேல்புறத்தில் ஒரு இணைச் சிறு கிடைக்கோடுகளைப் பெறும் ( கை,சை). ஒகர ஒகாரங்கள் ஏறிய மெய்யெழுத்துக்கள் ஆகாரத்திற்கு இடப்பட்ட வலது மேல் கிடைக்கோட்டுடன் முறையே எகர ஏகாரங்கள் பெற்ற குறியீடுகளைப் பெறும். ( கொ, கோ)[5]

இத்தகைய சீரொழுங்கு முறையில் அமைந்த குறியீடுகள் 2000 ஆண்டுகளுக்கு மேலாக, எழுதுவோரின் கலை மனம், மன, உடற்சோர்வு, மற்றும் எழுதப்படும் பொருளின் தன்மைகளால் காலந்தோறும் மாற்றம் பெற்று காலாகவும், கொம்புகளாகவும், இருசுழி ஐகாரக் குறியாகவும் உருப்பெற்று முன்பு அடியெழுத்தைப் ஒட்டி இருந்தவை பினனர் பிரிந்து இன்று தனித் தனிக் குறியீடுகளாகிவிட்டன.[6]

இனி, இன்றைய வரிவடிவுகளை நோக்க உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு மெய்யின் மேல் ஏறி வரும் உயிர் பன்னிரண்டில், அகரம் நீங்கலாக உள்ள பதினொரு உயிர்களுக்கான குறியீடுகள் பதினொன்றாக 12+18+11 =41 குறியீடுகளே அல்லது வரிவடிவுகளே தமிழில் உள்ளன. இது ஆங்கில வரிவடிவுகளை விடக் குறைவே. இதிலும் ஒளகாரக் குறியீடாக வரும் ள என்ற வடிவு ஏற்கெனவே இருப்பதால் மொத்த குறியீடுகளில் ஒன்றைக் குறைத்து ஆய்த எழுத்தைச் சேர்த்தாலும் மொத்தக் குறியீடுகள் நாற்பத்தொன்றாகவே உள்ளது.

ஆனால் நமது எளிய எண்ணிக்கைக் கூற்றுக்கு எதிராய், தடைக்கல்லாய் முன்னின்று அச்சுறுத்துவன சீரொழுங்கு பிறழ்ந்த உகர ஊகாரக் குறியீடுகளேயாம்.

பண்டைய எழுத்துக்களின் புள்ளி இல்லா மெய்யெழுத்துக்களின் கீழ்ப் பகுதியில் நேர்க்கோடாக உள்ள எழுத்துக்களுக்கு வலப்புறமும், வளைவான அடியை உடைய எழுத்துக்களுக்குக் கீழ்புறமும் அமைந்த உகர, ஊகாரக் குறியீடுகள் பண்டைத் தமிழ் எழுத்துக்களில் ஒழுங்குப்பட்ட சீர்மைக் குறியீடுகளாக ( கு,மு நு) தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே கையாளப்பட்டதென்று முன்பே கூறியுள்ளோம். அதன் பின் ஏற்பட்ட வளர்சிதை மாற்றங்களால் கரணியத்தோடும் கரணியமின்றியும் பண்டைய எழுத்து வடிவுகளில் சில குறியீடுகளில் சீரொழுங்கு குன்றின.

அவற்றுள் சிலவற்றை தற்பொழுது நாம் சீர் செய்து விட்டோம். எடுத்துக்காட்டாக ண,ன,ற போன்ற எழுத்துக்களில் ஏற்பட்ட ஆகரக் குறியீட்டுச் சீர்கேட்டையும் (ணு, று) ண,ல,ள ன-களில் ஏற்பட்ட ஐகாரக் குறியீட்டுச் சீர்கேட்டையும் ணை,லை,ளை,னை களைந்து சீரான குறியீடுக்குக் (ா) கொண்டு வந்து விட்டோம். அதாவது பண்டைய குறியீட்டுச் சீர்மைக்கே மாற்றிவிட்டோம்.[7]


இன்று நமக்குப் பெருஞ்சிக்கலாகத் தோன்றுவதும், நமது எழுத்தை சிக்கலெனப் பலர் கூறுவதற்கு இடமாக இருப்பதும் உகர, ஊகாரக் குறியீடுகளே. உகர, ஊகாரக் குறியீடுகளின் சீரொழுங்கு பிறழ்ச்சிக்கும், அதன் வெவ்வேறுபட்ட வளர்ச்சிக்குமான பின்புலத்தை நன்கு அறிந்தால்தான் அச்சிக்கல்களுக்குத் தீர்வு காணுதல் எளிதாகவும் ஏற்கத் தக்கதாகவும் அமையும். ஆதலால் அதன் பின்புலத்தைச் சற்றே நோக்குவோம்.

உகர, ஊகாரக் குறிகள் கால வளர்ச்சியில் மாற்றங்களைப் பெற்றாலும் ஏனைக் குறியீடுகளைப் போல மூல எழுத்தைவிட்டுப் பிரியாது அவ்வெழுத்துக்களோடு ஒட்டியே சீரொழுங்கற்ற வெவ்வேறுருக்களாக மாறிவிட்டன. இதலால் இவை தமிழ் வரிவடிவின் எண்ணிக்கையில் 36 தனி வடிவங்களைப் பெருகச் செய்து விட்டன. இதுவே இன்றைய சிக்கல். இதனையும் எளிமையாக நேர் செய்திட எழுத்துக்களின் வளர்நிலையிலேயே மருந்தும் உண்டு.[8]

நீண்ட வரலாறும், நெடிய மரபும் உடைய மாந்த இனங்கள் தம்முடைய நடைமுறையில் பதிந்து கால் கொண்டவற்றை எளிதில் மாற்றிக் கொள்ள ஒறுப்படாமை உலகவியற்கை. அதே நேரத்தில் தமது வளர்ச்




படிப்பகம்






படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com

சிக்குத் தடையானவற்றிற்குத் தனது மரபு வழியிலான இணை வளர்ச்சிகளை அவற்றுக்கு மாற்றாக ஏற்றுக் கொள்வதில் அவை தயக்கங்காட்டாது. இத்தகைய அடிப்படை மரபை உணர்ந்து மரபு வழியைச் சிதைக் காதனவும் தம்முள் முகிழ்த்தனவும், ஏற்கத் தக்கதுமான மாற்றங்களை நயம்பட எடுத்து விளக்கினால் ஏற்பது உறுதி. இதுவே நன்கு நிலைப்பதற்கும், சென்று செழிப் பதற்கும் வழியாதலால் அத்தகைய வழியை எடுத்துக் கூறுவது மிக இன்றியமையா ஒன்று.

இந்தியத் துணைக் கண்டத்தின் வடக்கில் தோன்றிய சமண, புத்த மதங்கள் அதன் வளர்ச்சி காரணமாகத் தெற்கிலும் பரவத் தொடங்கின. மததைப் பரப்புவதற்காக தெற்கில் வந்த சமண, புத்த மதத்தினர் தமிழ்நாட்டில் வழங்கிய எழுத்துக்களைக் கற்று வடக்கிலும் பரப்பினர். வேத மதத்தினரும், சமண, பவுத்தர்கள் வாயிலாகவும் சமண, புத்தர்களைப் போல தெற்கிலும் பரவியும் இவ்வெழுத்துக்களைக் கற்று அதன் பயனையும், தேவையையும் உணர்ந்தனர். ஆயினும் தமிழ் மொழிக்கே உரிய வரிவடிவுகள், தமது மொழியில் மிகையான வருக்க மற்றும் மெல்லொலி எழுத்துக்களுக்குப் போதுமானதாக இல்லை. அதனால் அவற்றிற்கான வரிவடிவுகளைதம் தமிழ் எழுத்துக்களின் அடியொற்றி உருவாக்கிக் கொண்டனர்.[9]

மேற்கண்ட காலக்கட்டத்தில் சமண, புத்த மதங்கள் வடக்கில் பெற்ற அரசச் செல்வாக்கிற்கு வேத மதத்தினரால் ஈடு கொடுக்க இயலவில்லை. ஆதலின் தம் வேதக் கொள்கை பரவுவதற்காகவும், வாழ்வுக்கான வாய்ப்பிடங்களைத் தேடியும் தெற்கில் பரவத் தொடங்கினர். தென்னக அரசுகளை அண்டிப் பைய பையச் செல்வாக்குப் பெற்று அவர்களைக் கொண்டு வேள்விகளைச் செய்து சிறப்பிக்கப் பெற்றனர். அடிப்படையில் ஓதலும் ஓதுவித்தலும் இவர்களது தொழில் எனக் கூறப்படினும் அரசர்களிடம் பெற்ற செல்வாக்கினால் ஒருசாரர் பின்னாட்களில் அரசில் குருமார்களாகவும் அனைத்துத் தலைமைப் பதவியின் அலுவலர்களாகவும், ஆவணம் எழுதுவோர், நடுவர் எனப் பல்வேறு முகாமைப் பணியாளர்களாகவும், அரசமைப்பின் ஆணிவேர்ப் பகுதிகளில் நீக்கமறப் பரவினர். பிறிதொரு சாரார் வேத வேள்விகளைப் பரப்புவதோடு கோயில் நிருவாகம் முதல் பூசகர் வரை அனைத்து மத அமைப்பின் இடங்களையும் தமதாக்கிக் கொண்டனர். தாமாக வந்தவர்களையன்றி தமிழ் அரசர்களும் கங்கைக் கரைவரை உள்ள வேத மதத்தினர் பலரை தமிழகத்திற்குக் கொண்டு வந்து குடியேற்றினர்.

அறிவார்ந்த குமுகாயமாகத் தங்களைக் காட்டிக் கொண்ட இனங்கள் அனைத்தும் தமக்குத் தோதான வாழ்க்கைக்கு எங்கெங்கே வழிகிடைக்கின்றதோ அங்கெல்லாம் பரவி வலுவாகக் காலூன்றி தம்மை நிலை நிறுத்திக் கொள்வதோடு, அங்கே தங்கள் மத, மொழி பண்பாடுகளைப் பரவச் செய்து அம்மண்ணின் மாண்பை நீர்க்கச் செய்தல் உலகில் கண்கூடு.[10] அதற்கு விதிவிலக்கின்றி தாம் காலூன்றிய இடங்களில் எல்லாம் ஆட்சியில், ஆவணத்தில், வாய்மொழியில் மற்றும் தமது படைப்புகளில் இவர்கள் தமது மொழிச் சொற்களையும், மதக் கோட்பாடுகளையும் நயந்தும் வலிந்தும் திணிப்பாராயினர். தமிழ் மக்களில் பெரும்பான்மையினர் அறியாமையாலும், சிறுபான்மையோர் போலிப் பெருமைக்காகவும் இவற்றை ஏற்கவும் புலமை பெறவும், பயன்படுத்தவும் பரப்பவும் செய்தனர் என்பதையும் நாம் மறுக்கவியலாது. இவற்றின் வெளிப்பாடே இன்று நாம் காணும் சில நூறு வடமொழிக் கல்வெட்டுக்களும், ஆயிரக்கணக்கான வடசொற் கலந்த தமிழ்க் கல்வெட்டுக்களும், இதுகாறும் தமிழ் நாட்டில் கிடைத்துள்ள மொத்த ஓலைச் சுவடிகளில் மூன்றில் இரண்டு பங்கிற்கு மேலானவை வடமொழிச் சுவடிகளே ஆகும். இதனால் இன்று தமிழகத்தில் வடசொற் கலவாத கல்வெட்டு ஒன்று கூட இல்லை என்ற அளவுக்குத் தன்னை வலுப்படுத்திக் கொண்டது வடமொழி. மேலும் தமிழ் நுண்கலைகளெல்லாம் வடமொழிப் படுத்தப்பட்டு அடிப்படையான தமிழ் நூல்கள் பயன்படுத்துவாரின்றி இறந்துபட இன்றைய கலை நூல்கள் வடமொழியில் இருப்பதால் தமிழகக் கலையையே ஐயப்படச் செய்துவிட்டது.[11]

(அடுத்த இதழில் முடியும்)

<u>அடிக்குறிப்பு</u>

1. உலகில் இன்று மின்னியல், கணிப்பொறியியல், வணிகவியல் முதலானவற்றில் முன்னணியில் நிற்கும் சப்பானையும் அதன் எழுத்துக்களையும் காண்க. திரு. சுசாதா கூறுவது போல இடியாப்பச் சிக்கல் போன்ற அவ்வெழுத்தைக் கொண்டே அறிவியல் முதல் எல்லாவற்றிலும் முன்னணியில் நிற்கின்றனர். "எழுத்தா தடை?" நடன மலர்கள், ஜுனியர் விகடன்.
2. பண்டைத் தமிழ் எழுத்துக்களின் வரிவடிவைப் பின்னிணைப்பில் உள்ள பட்டியலில் காண்க.
3. இதன் பின் வந்த உரையாசிரியர்கள் தொல்காப்பியர் காலத்திற்குச் சற்றேறத்தாழ 1500



படிப்பகம்

www.padippakam.com

ஆண்டுகட்குப் பிற்பட்டவர்களாவர். அவர்கள் தொல்காப்பியர் கால வரிவடிவை அறிய வாய்ப்பில்லை. அதனால் தத்தங் காலத்துக் கண்ட வரிவடிவுகளையே மேற்கொளாகக் காட்டி அவ்வுரு பற்றியே விளக்கியுள்ளனர்.

4. நேர்கோடான எழுத்துக்களின் கீழ்ப்பகுதியில் கிடையாகப் போடப்படும் ( (கு,து) கோடுகளை வளைந்த, தட்டையான அடிப்பகுதியை உடைய எழுத்துக்களுக்குப் போடுவது எளிமையானதன்று. குழுப்பந்தரும், ஆதலின் எழுத்துக்களின் கீழ்ப்பகுதியில் தொங்குவது போல அமைத்தனர். ( டு, மு, ணு).

5,6. எகர, ஒகரக் குறில்கள் புள்ளி பெறும் என்பது தொல்காப்பியம், "மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்", "எகர ஒகரத் தியற்கையும் அற்றே" (தொல். எழு: 15,16. என்ற தொல்காப்பிய விதிப்படி மெய்யெழுத்துக்களும், ஏகார, ஒகார எழுத்துக்களும் புள்ளியுடனே எழுதப்பட்டதை மிகப் பழமையான, பண்டைத் தமிழ் எழுத்துக் கல்வெட்டுகளில் காண முடிகிறது. ஓலைச் சுவடிகளில் புள்ளியிட்டு எழுதும் பொழுது மெய் மற்றும் ஏகர ஏகார புள்ளிகள் ஓலையின் இருப்பக்கமும் தோன்றி சிக்கலை தோற்றுவித்தமையால் ஓலைச் சுவடிகளில் புள்ளியைத் தவிர்த்து எழுதினர். அதனால் அப்பழக்கமே ஓலைச் சுவடியை அடியாகக் கொண்டு எழுதப்படும் கல்வெட்டுகளிலும் புள்ளி தவிர்ந்தது.

7. ஆகாரம் ஏறிய உயிர் மெய்களுக்கு (ஆகாரக் குறி) - கால்- (ா) குறியும், ஐகாரமேறிய உயிர்மெய்களுக்கு "ை" குறியும் (ஐகாரக் குறி) எல்லா எழுத்துகட்கும் பொது. வளர்ச்சிப் போக்கில் கி.பி.16,17 நூற்றாண்டளவில் ண,ல,ள,ன போன்ற எழுத்துக்களின் முன் வேறுப்பக்கத்தில் இடப்பட்ட ஐகாரக் குறி இருசுழியாக வளர்ந்து எழுத்தை ஒட்டி குழப்பத்தை ஏற்படுத்தின. அனதால் அதனை ணை, லை என மேலேற்றி எழுதினர். ஆகாரம் ண,ற, ன போன்ற எழுத்துக்களில் ஒட்டி வளர்ந்து சுழிந்து விட்டன. (ணா,றா, னா) இதனால் சீர்மை (Uniformity) சிதைந்தது. இவை தந்தை பெரியாரின் முயற்சியாலும், திரு. மா... கோ, ரா. (எம்.ஜி. ஆர்) அரசின் ஆணையாலும் மீண்டும் பழைய ஒழுங்குக்கு ஏற்ப சீர் செய்யப்பட்டு விட்டன.

8. எழுத்துக்களின் வல அடிப்பக்கம் நேர் கோடாக உள்ள எழுத்துக்களில் கீழ் பகுதியில் கிடையாகவும், அடிப்பக்கம் வளைவாக உள்ள எழுத்துக்களின் கீழ் தொங்குவது போலவும் சிறு கோடுகளாக இடப்பட்டவை, பின் அவற்றுடன் ஒட்டி வளர்ந்து கு, கூ.... எனத் தனித்தனி சீரொழுங்கற்ற உருவைப் பெற்றன. இந்த உகரக், ஊகாரக் குறி கடைசிவரை மூல எழுத்தை விட்டு பிரியவில்லை.

9. எழுத்து, மொழி வழக்கு மற்றும் கிடைத்துள்ள சான்றுகளின் அடிப்படையில் பண்டைத் தமிழ் எழுத்துக்களே இந்தியத் துணைக் கண்டத்தில் முன்தோன்றியவை என்பது தெளிவு. தமிழ் எழுத்துக்களின் அடிப்படையில் வளர்ச்சி பெற்றதே அசோகன் பிராமி. அதில் காணக்கிடைக்காத எழுத்துக்களும், கூட்டெழுத்து முறைகளும் பின்னர் வளர்ந்தன. சரியான ஆய்வு மேற்கொள்ளாததால் தமிழ் எழுத்துக்கள் பிராமி எழுத்துக்களினின்று உருவானவை என்று இதுகாறும் பேசப்பட்டு வருகிறது. ஆயின் உண்மை அதற்கு மாறாக உள்ளது. இது தமிழகத்தில் தோன்றி வடக்கில் பரவியதற்கான சான்றாதாரங்கள் மிகவுள்ளன. மெய்யுடை ஒரு கருத்து திறம்பட எடுத்துச் சொல்லமாட்டாமையால் பொய்யாகியுள்ளது. இது பற்றி மெய்மை ஆய்வு விரைவில் வெளிக் கொணரப்படவுள்ளது.

10. ஆங்கிலேயருடைய குடியேற்ற நாடுகளில், அவர்களின் செயல்பாடுகளை ஒப்பிட்டு நோக்குக.

11. வடமொழியே ஓதவும் ஓதுவிக்கவும்படும் மொழியாகப் பரப்பப்பட்ட பொழுது தமிழ்க் கலைநூல்கள் பல பயன்பாடின்றி அழிந்தன. (பார்க்க மயிலை. சீனி வேங்கட சாமியாரின் மறைந்து போன தமிழ் நூல்கள் - கழக வெளியீடு) இன்று நமக்குக் கிடைக்கும். நாட்டிய, ஓவியக் கட்டடக் கலை நூல்கள் யாவும் வடமொழியிலேயே உள்ளன. ஆனால் அவை கூறும் கலை இலக்கணத்திற்கான எடுத்துக்காட்டுகள்யாவும் தென்னகத்தவை என்பது ஒன்றே தமிழ்க் கலைநூல்கள் இருந்தன என்பதற்கும் அவை மொழி மாற்றம் செய்யப் பெற்றுவிட்டன என்பதற்கும் சான்று. இன்று ஆங்கிலக் கல்வியால் ஏற்பட்ட விளைவு அன்று வடமொழிக் கல்வியால் ஏற்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

குர்திய தேசியத் தலைவர்

# ஒசலானை விடுதலை செய்!

- பட்டியூர் பாவலர்

ஒரு நாடகம் போல் அது நடந்து விட்டது. கென்யாத் தலைநகர் நைரோபியில் கிரேக்கத் தூதரகத்திலிருந்து விமான நிலையம் வரும் வழியில் குர்தியத் தொழிலாளர் கட்சித் தலைவர் அப்துல்லா ஒசலான் துருக்கிக் காவலர்களால் கைது செய்யப்பட்டார்.

ஒசலானைப் பிடிப்பதற்காக 15 ஆண்டுகளாகப் பல கோடி டாலர்களைச் செலவழித்தது துருக்கி. கடைசியில் நம்பிக்கைத் துரோகம் ஒசலான் கைதுக்கு உதவியது.

துருக்கி, ஈரான், ஈராக், சிரியா முன்னாள் சோவியத்தின் மத்திய ஆசியக் குடியரசுகள் ஆகியவற்றில் பரவிக் கிடக்கும் தேசிய இனத்தவர் குர்தியர்கள்(Kurd). துருக்கியில் ஒரு கோடிப் பேரும் ஈரானில் 50 லட்சம் பேரும், ஈராக்கில் 40 லட்சம் பேரும், சிரியாவில் பத்து லட்சம் பேரும் முன்னாள் சோவியத் குடியரசுகளில் மூன்று லட்சம் குர்தியர்களும் வசிக்கிறார்கள்.

இந்தக் குர்தியர்களுக்கொரு நாடு அமையவில்லை. அவர்கள் தேசத்தை ஆப்பம் பங்கு போட்ட கதையாய் மேற் கண்ட நாடுகள் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன.

குர்திஸ்தான் குடியரசை நிறுவ கொரில்லாப் படை அமைத்துக் குர்தியர்கள் போராடுகிறார்கள். இந்நோக்கத்திற்காக இங்கு சில கட்சிகள் போராடுகின்றன. இவற்றுள் மிக முக்கியமானதும், ஆட்சியாளர்களை அச்சுறுத்திக் கொண்டிருப்பதும் குர்தியத் தொழிலாளர் கட்சி (P.K.K.). இதன் தலைவர்தாம் அப்துல்லா ஒசலான்.

துருக்கிப் பகுதியில் குர்தியத் தொழிலாளர் கட்சி(கு.தொ.க.) வேர் கொண்டுள்ளது, அங்கு கொரில்லாப் போர் நடத்திக் கொண்டுள்ளது. கு.தொ.க. ஒரு சோஷலிஸ்ட் கட்சி என்ற செய்தி துருக்கி அரசின் ஆத்திரத்தைத் தீவிரப்படுத்தியது. சோவியத் ஒன்றியம் இருந்தவரை கு.தொ.க.வுக்குப் பேராதரவு கிடைத்து வந்தது.

சதாம் உசேனை ஒழித்து ஈராக்கை அடிமைப்படுத்த அடிக்கடி ஆக்கிரமிப்புப் போர்



அப்துல்லா ஒசலான்

புரியும் அமெரிக்கா, ஈராக்கின் வடபகுதியில் உள்ள குர்தியர்களின் தன்னுரிமையை ஆதரிப்பது போல்



படிப்பகம்

www.padippakam.com

நாடகமாடுகிறது. குர்தியர் வாழும் வடபகுதியில் ஈராக் விமானம் பறக்கக் கூடாது என்று தடை போடுகிறது. ஆனால், குர்தியர்களை வேட்டையாடும் துருக்கியை அதே அமெரிக்கா ஆதரிக்கிறது. காரணம், அமெரிக்காவின் தலைமையில் உள்ள நேட்டோ இராணுவக் கூட்டில் துருக்கி உறுப்பு வகிக்கிறது.

ஒசலானைத் தேடுவதில் துருக்கிக்கு அமெரிக்க சி.ஐ.ஏ. உதவி செய்தது. அமெரிக்கா ஈராக்கின் வட பகுதியில் ஈராக் விமானம் பறக்கத் தடை விதித்த நடவடிக்கை கு.தொ.க. கொரில்லாக்களுக்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது. அங்கு தங்கி துருக்கியப் பகுதியில் போர் தொடுத்தனர். ஒசலான சிரியாவில் தங்கி விடுதலைப் போர் நடவடிக்கைகளுக்கு வழி காட்டினார்.

கடந்த ஆண்டு துருக்கி அரசு சிரியாவுக் கெதிரான கெடுவிதித்தது. ஒன்று ஒசலானை வெளியேற்ற வேண்டும் அல்லது போரைச் சந்திக்க வேண்டும் என்பது துருக்கியின் கெடு. துருக்கி தனது படையணிகளை சிரியா எல்லையில் கொண்டு போய் நிறுத்தியது.

கடந்த ஆண்டு இறுதியில் ஒசலான் சிரியாவை விட்டு வெளியேறி இத்தாலியின் தலைநகர் ரோமாபுரிக்குச் சென்றார்.

இத்தாலி ஒசலானுக்கு அடைக்கலம் தருவது போல் தோன்றியது. அமெரிக்காவின் ஆதரவுடன் துருக்கி இத்தாலியை நிர்பந்தித்தது; ஒசலானை ஒப்படைக்கும்படி துருக்கி கோரியது. அமெரிக்கா, ஒசலானுக்குப் "பயங்கரவாதி" என்று பட்டம் கொடுத்தது. உலகப் பயங்கரவாதி, உரிமைப் போர் நடத்துவோர்க்குப் பயங்கரவாதிப் பட்டம் கொடுப்பதுதான் வரலாற்று முரண்!

ஜெர்மன் அரசும், ஒசலானைக் கைது செய்யுமாறு கைது வாரண்ட் பிறப்பித்து இத்தாலிக்கு அனுப்பியது. ஆனால் ஜெர்மனியில் அகதிகளாக வாழும் பல்லாயிரக்கணக்கான குர்தியர்களின் எதிர்ப்புக்கு அஞ்சி, அதை வலியுறுத்தவில்லை.

கடைசியாக ஒசலானை வெளியேற்ற வில்லையெனில், இத்தாலியுடன் ஆன வணிக ஒப்பந்தங்களை ரத்து செய்வோம் என்று மிரட்டியது துருக்கி. "உபசரிப்பு நாட்களுக்கு" மேலாகத் தங்கி விட்டதாக ஒசலானிடம் இத்தாலி கூறியது. ஒசலான் இத்தாலியை விட்டு வெளியேறிவிட்டார் என்று அந்நாட்டு அரசு 1999 ஜனவரியில் அறிவித்தது. குர்தியத் தலைவர் ரஷியாவுக்குச் சென்று இருப்பார் என்று ஊகம் கிளம்பியது.

கென்யா நாட்டின் கிரேக்கத் தூதரகத்திலிருந்து வெளியே வரும்போது ஒசலான் கைது செய்யப்பட்டார் என்று துருக்கியின் பிரதமர் புலென் எசிவிட் அறிவித்ததும் மனித நேய நெஞ்சங்கள் உறைந்து போயின!

அறிவிக்கப்படாத ஏதோ ஒரு நாட்டில் அடைக்கலம் பெற-ஒப்புதல் பெற்று அதற்கான ஏற்பாட்டில் கிரேக்கத் தூதரகத்தில் நுழைவுச் சீட்டு பெற்றுக் கொண்டு விமான நிலையம் நோக்கி விரைகையில் ஒசலான் கைது செய்யப்பட்டார். ஐரோப்பிய நாடுகளில் பரவிக் கிடக்கும் பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட குர்தியப் புலம் பெயர்ந்த மக்கள் கிரேக்கத்தைக் குற்றஞ்சாட்டுகின்றனர்; காட்டிக் கொடுத்துவிட்டதாகச் சாடுகின்றனர்.

மர்மராக் கடலில் உள்ள தீவுச் சிறையில் வைக்கப்பட்டுள்ள ஒசலானுக்கு துருக்கி அரசு மரண தண்டனை விதிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

வரலாற்றில் வஞ்சிக்கப்பட்ட தேசிய இனங்களில் குர்தியத் தேசிய இனமும் ஒன்று. துருக்கி, ஈரான், ஈராக், சிரியா முன்னாள் சோவியத் குடியரசுகள் என்று அம்மக்கள் சிதறிக் கிடந்தாலும் துருக்கியில் தான் அதிகமாக வாழ்கிறார்கள். அந்நாட்டு மக்கள் தொகை 5½ கோடி; அதில் ஒரு கோடிப் பேர் குர்தியர்கள்.

துருக்கியில், ஒருவர் தன்னைத் "குர்தியர்" என்று சொல்லிக் கொள்வதே தேசத்துரோகம். தன் தாய்மொழி குர்திய மொழி என்று சொன்னால் கூடக் குற்றம். இலண்டனில் உள்ள துருக்கியத் தூதரை இது குறித்துக் கேட்டபோது "அது உண்மைதான்" என்று ஒப்புக் கொண்டார்.

துருக்கி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர். ஒரு பொது இடத்தில் பேசும்போது, "துருக்கியில் குர்தியர் உள்ளனர்; நான்கூட ஒரு குர்தியக் குடிமகன்தான்" என்று கூறி விட்டார். துருக்கி அரசு அவர் தேசிய உணர்வுகளைப் பலவீனப்படுத்தும்



படிப்பகம்

www.padippakam.com

வகையில் பேசினார் என்று குற்றம் சாட்டி அவர் மீது வழக்குத் தொடுத்தது. நீதிமன்றம் அவர்க்கு இரண்டாண்டு கடுங்காவல் தண்டனை விதித்தது.

1922-ல் துருக்கியக் குடியரசு நிறுவப்பட்டது முதல் குர்தியர் தனித்துவம் மறுக்கப்பட்டது. 1924-ல் குர்தியப் பள்ளிகள், சங்கங்கள், பிரசுரங்கள் யாவும் தடை செய்யப்பட்டன. இவ்வடக்கு முறையை எதிர்த்துக் கிளர்ச்சி செய்த குர்தியர்களைத் துருக்கி கொடூரமாக ஒடுக்கியது.

1920களிலும் 1930 களிலும் நூற்றுக்கணக்கான கிராமங்களைத் தரை மட்டமாக்கின துருக்கியப் படைகள். 10 லட்சம் குர்தியர்கள் தங்கள் ஊர்களை விட்டு துருக்கியின் மேற்குப் பகுதிக்கு விரட்டப்பட்டனர்.

1970 களில் நாடாளுமன்ற இடதுசாரிக் கட்சிகளை குர்தியர்கள் ஆதரித்தார்கள். ஆனால் அந்த இடது சாரிகளின் "சோஷலிசம்" குர்தியர்களின் தேசியத் தன்னுரிமையை அங்கீகரிக்கவில்லை. இதில் கண்ட ஏமாற்றமே புதிய போராட்டக்குழுக்களை ஒருவாக்கியது. இடதுசாரிகள் மீது குர்தியர்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றம் இஸ்லாமிய மதவாதக் கட்சிக்கு (Islamic Virtue Party) ஆதவரவாக 1995-ல் அவர்களை வாக்களிக்கச் செய்தது.

இப்பின் புலத்தில் உருவான குர்தியத் தொழிலாளர் கட்சி, தன்னை ஒரு சோஷலிசக் கட்சியாக அறிவித்தது; ஆயுதப் போராட்டத்தைக் கையில் எடுத்தது. அரசின் ஆயுதப் படைகள் மீதும், அப்படைகளுக்கு உதவும் குர்தியத்துரோகிகள் மீதும் கு.தொ.க. கொரில்லாக்கள் தங்கள் ஆயுதங்களைத் திருப்பினர்.

தன்னை ஒரு சோஷலிச இயக்கம் என்று அறிவித்துக் கொண்டதால், கு.தொ.க.வுக்கு எதிராகக் குர்திய நிலக் கிழார்கள் திரும்பினர். அந்நிலக் கிழார்கள் எப்போதும் குர்திய தேசியத்தின் பக்கம் நின்றவர்கள் இல்லை. அவர்கள் துருக்கி அரசுக்கு ஆதரவாகச் செயல்பட்டனர். இருந்தாலும் அவர்கள் கு.தொ.க. வுக்கு எதிராக ஓரளவு குர்திய மக்களைத் திசை திருப்பினர். தொடர்ந்து நடந்த போராட்டங்கள் கு.தொ.க. வுக்குக் குர்தியர்களிடம் செல்வாக்கைத் திரட்டியது. நாடாளுமன்ற அமைப்புகள் மீது குர்தியர்களுக்கு நம்பிக்கை குறைந்தது.

தங்களின் எதிர் கால விடியல் நட்சத்திரமாக ஒசலானைக் குர்திய மக்கள் கருதினர். அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்று துருக்கி அரசுக்கும் ஒசலான் தெரிவித்திருந்தார். ஆனால் துருக்கி அரசு வன்மத்தை விடவில்லை. வஞ்சகமாகப் பிடித்து விட்டது. வன் கவர்தல் செய்து குர்திஸ்தானை வசப்படுத்தியுள்ள துருக்கி ஆட்சி மண்ணின் தலைவரைக் குற்றவாளி போல் கைது செய்தது.

தேசியத் தன்னுரிமை, மனித நேயம், சோஷலிசம் ஆகிய கோட்பாடுகளில் நம்பிக்கை உள்ள பன்னாட்டுச் சமூகம் **ஒசலானை விடுதலை செய் என்று உரத்து முழங்க வேண்டும்.**

## விழுப்புரத்தில் தொடர் முழக்கப் போராட்டம்

மதவெறி அமைப்புகளைக் கண்டித்து பிற்பகல் ½ நாள் தொடர் முழக்க ஆர்ப்பாட்டம் இங்குள்ள தமிழ் அமைப்புகள் சார்பில் நகராட்சி அலுவலகம் அருகில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு விழுப்புரம் நகர் மன்ற உறுப்பினர் இரா. சர்க்கரை (பகுத்தறிவாளர் கழகம்) தலைமையேற்க, பெரியார் அண்ணா, பேரவையைச் சார்ந்த அரு. முத்தமிழடியான் முதல் முழக்கமிட்டு தொடக்கி வைத்தார்.

பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த பொறுப்பாளர்கள், வீ. அழகரசன், வி. தயானந்தம் அ. அனவரதன், விழுப் பரையனார், சி. அப்பாவு, இரா. காமராஜ், த. பழமலய் மா. அறிவுக்கண்ணு, கு. சித்தா, ப. முபாரக் அலி, த. பாலு, அ. வீரமணி முதலானோர் உரையாற்ற த.தே.பொ.க. மாவட்டச் செயலாளர் தோழர் இராசேந்திர சோழன் நிறைவு முழக்கமிட்டு முடித்து வைத்தார்.

தந்தை பெரியார் படிப்பகத் தோழர் பிரபா -தண்டபாணி நன்றி கூறினார். விழுப்புரம் எம். செல்வராஜ் குழுவினரின் கலைநிகழ்ச்சியும் நடைபெற்றது.



படிப்பகம்

www.padippakam.com

# பாரதிதாசன் மைல்கற்களும் இன்றைய பாதையும்

- து. மூர்த்தி

வரலாற்றில் செய்தித் தொடர்பு - கலை - ஊடகங்கள் எத்தனை தோன்றினாலும், வளர்ச்சி அடைந்தாலும் கவிதையும் கவிஞனும் கடைக்காலாகவும் சிகரமாகவும் நிலைபெறுகிறார்கள். அது எதனால்? வாழ்த்துப் பாவும் இரங்கற்பாவும் எப்போதும் தயாராக வைத்துக் கொண்டிருக்கும் எழுத்து வணிகர்கள் 'கவிஞன்' என்ற எல்லைக்குள் வரமுடியாது என்பதை நாம் அறிவோம்! "நற்றிறம் படராக் கொற்கை வேந்தே!" என அரசனையே, அவன் சபையிலேயே கேள்விக்குள்ளாக்கிய கண்ணகியைப் - பெண்ணைப்- படைத்த ஆதிகவி இளங்கோவடிகள் முதல், கரடுதட்டிப்போன நிறுவனங்களைக் கேள்விக்குள்ளாக்கும் கம்யூனிஸ்ட் கவி இன்குலாப் வரை இலக்கிய உலகில் இடம் பெற்றிருப்பது அரச பரம்பரை என்பதாலோ ஆண்டி பரம்பரை என்பதாலோ அல்ல! எந்தவொரு காலத்திலும் மக்களின் மனசாட்சிக் குரலாய் அதிர்பவர்கள், காலத்தின் சுவடுகளாய் நிலைக்கிறார்கள். தனியொரு கவிஞனின் பல்வேறு கவிதைகளுக்குள்ளும், நிறுவன எதிர்ப்புக் கவிதைகள் சமூகத்தின் தனி ஒப்புதலைப் பெறுகின்றன. அப்படி அங்கீகரிக்கப்பட்ட பெரியார் இயக்கக் கவிஞர்களுள் தலைமையானவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

ஒரு புதிய சமுதாயத்தின் உருவாக்கத்தின்போது, தத்துவம், தலைவன், கலைஞன் என்ற மூன்று நிகழ்வுகள், பிரிக்கமுடியா உடன் நிகழ்வுகளாய் அமைகின்றன: நாத்திகம் என்னும் அறிதல் நெறி பெரியார் என்ற தலைவன், புரட்சிக் கவிஞர் என்ற கவிஞன் - தமிழ்ச் சமுதாய வரலாற்றில் உடன் நிகழ்வுகளாய் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து இயங்கியவர்களாவர். இதில் யாரைப் பிரித்தாலும் வரலாறு அழிந்துவிட்டது என்று பொருள்.

மொழிப்பற்று, தமிழினப்பற்று, நாத்திக நெறி, இன-நாட்டு விடுதலை, பெண்விடுதலை பொதுவுடைமைச் சமுதாயம், எனப்பரந்த பொருள் எல்லைக்குள் பாரதிதாசன் மொழி, பெண் விடுதலை, நாத்திக நெறி என்ற மூன்றின் பிணைப்பாவார். பெரியார் மானிட வளர்ச்சிக்குத் தடையாய் அமையும் எதையும் - மொழிப்பற்றையும் எதிர்த்தார். பாரதிதாசன் மொழியை மானிட வளர்ச்சியின் அடையாளமாய், அடிப்படை அலகாய், உரை கல்லாய்க் கண்டார். மொழி வெறும் கருத்தறிவிக்கும் கருவி (Instrument for communication) என்ற எந்திரமயமான எதிர் வாதத்தை முறியடித்து, மொழி ஒரு கருவி மட்டுமன்று, அது பண்பாட்டு போர் வாள் என்பதை மெய்ப்பித்துக் காட்டியவர் பாரதிதாசன்.

வரலாற்றில், மொழி, சமுதாய வளர்ச்சியில் அடித்தளமாய் அமைகின்றது. மனித குழுக்கள் தோன்றிய காலந்தொட்டு, அக் குழுக்களுக்கு இடையேயும் உள்ளேயும் நடைபெற்ற கருத்துப் பரிமாற்றம் தான் அக்குழுவை ஒரு சமுதாய மாற்றமடைய செய்ததோடு, அதன் நிலையான வாழிடத்தில், உற்பத்தி, மனித உறவு மற்றும் எல்லா அறிவுத்துறை வளர்ச்சி ஆகியவற்றின் கொள் கலமாகவும் வளர்ச்சியின் தொடர்பாதையாகவும் அமைந்தது. இன்று கூட, மொழியின் எல்லா வடிவங்களும் திடீரென்று மறைந்து விடுவதாக எண்ணிப்பார்த்தால் உலகின் அறிவுச் சுவடுகள் அனைத்தும் அழிந்து போன உணர்வே ஏற்படும். பின்னர் மனிதன் பொருள்களின் இடையில் மூச்சு விடும் இயந்திரம் போல மட்டுமே வாழ முடியும். எனவே மொழி மனித குலம் உணர்வு பூர்வமாக தன் உருவாக்கத்திற்குப் படைத்துக் கொண்ட அறிவு மற்றும் பண்பாட்டுக் கருவியும், அடையாளமும் ஆகும். உலகில் மொழி வளர்ச்சியைப் பற்றிப் பேசிய எல்லா அறிஞர்களும் கல்வி வளர்ச்சியினூடே அதை இணைத்துப் பார்த்திருக்கிறார்கள். கல்வியை வளர்க்காமல் மொழியை மட்டும் தனியே வளர்க்க முடியாது என்பதை உணர்ந்திருந்தார்கள். மொழி → கல்வி → அறிவு → மொழி என்று வளர்ச்சியின் பாதை அமைவதாகும். கல்வி வளர்ச்சியின் காரணமாகவே



படிப்பகம்

www.padippakam.com

ஐரோப்பிய, சீன, ஜப்பானிய மொழிகள் வளர்ந்தன. வெறும் இலக்கியத்தால் மட்டுமன்று! தமிழோ வெறும் இலக்கியமொழியாக மட்டுமே தேய்ந்தது. இந்தச் சூழலில்தான் தமிழர்க்கான அடிப்படைக் கல்வி வளர்ச்சி குறித்தும் பெரியார் எண்ணினார். துறைதோறும் தமிழைக் கொண்டுபோகவேண்டியதின் அவசியத்தைப் பாரதிதாசன் உணர்த்தினார். தமிழனை வளர்க்காமல் அறிவுத்துறைகளை வளர்க்காமல் தமிழ்மட்டும் தானே வளராது என உறுதியாக நம்பினார். தெருவில், வணிகத்தில், நீதியில், ஆட்சியில், கல்வியில், கடவுளில் தமிழ் வேண்டும் என நாத்திகக் கவிஞன் பாரதிதாசன் படைத்த தமிழ் இயக்கத்தின் பொருளைத் தமிழர்கள் இப்போதேனும் உணர வேண்டும். இப்போது எண்ணிப்பாருங்கள்.

எல்லார்க்கும் எல்லாம் என் றிருப்ப தான
இடம்நோக்கி நடக்கின்ற திந்த வையம்
கல்லாரைக் காணுங்கால் கல்வி நல்காக்
கசடர்க்குத் தூக்குமரம் அங்கே உண்டாம்.

என்ற வரிகளின் உண்மைப் பொருளை உணர முடிகின்றதல்லவா?

கல்வியும் மொழியும் வளர்ந்தால் அது தமிழரின் வளர்ச்சி அடையாளமாய் இருக்கும் என நம்பிய, தெளிந்த பாரதிதாசன், நாத்திகத்தைத் தன் அறிதல் நெறியாய் மேற்கொண்டார். ஆத்திகம் என்ற சொல்லின் எதிர்ப்பதமாய் மட்டும் நாத்திகம் இயங்க வில்லை. கடவுள் உண்டு. x இல்லை என்ற இணைகளில் மட்டும் நாத்திகத்தின் பொருள் அடங்கவில்லை. பெரியாரோ, பாரதிதாசனோ நாத்திகத்தை சமுதாய உருவாக்கம், மாற்றம், வளர்ச்சி என்பதன் அறிதல்/விளக்குதல் நெறியாகக் (Instrument for knowledge) கையாண்டனர். கடவுளை கிண்டல் செய்வது, புராணங்களை இழிவுபடுத்துவது என்பதுடன் நிறுத்திக் கொள்ளாமல் சமதர்ம சமுதாயத்தின் ஆணி வேறாக நாத்திகத்தை காட்ட முயன்றார். பெரியார் நாத்திகத்தைப்பற்றி பேசிய எல்லா இடங்களிலும் சமதர்மத்தை இணைத்தே பேசியுள்ளதின் பொருளின் தேவையை நாம் இப்போதாவது உணரவேண்டும். எனவே தான் சஞ்சீவி பர்வதத்தின் சாரல், பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு என எந்த நூலாக இருப்பினும் நாத்திகமும் பொதுவுடமையும் கைகோத்துச் செல்கின்றன.

தமிழனாய், தமிழன் என்று மட்டும் தன்னை அடையாளப் படுத்திக் கொள்வதில் பெருமைக் கண்டவராய் விளங்கிய பாரதிதாசனின் ஒப்பற்ற சொல்லாட்சிகளில் 'உலகப்பன்' என்பது கலகச் சொல்லாகும். உலகப்பண்பாட்டில் வரும் மனிதன் நிறம், மொழி, சாதி, மதம், இனம், நாடு என எந்த அடையாளமும் இல்லாதவனாக இருக்கின்றான். இதன் பொருள் மொழியும் இனமும் சாதியைப்போல ஒழிக்கப்பட வேண்டியவை என்பதல்ல! மொழியின் - இனத்தின் வெற்றி 'மனிதனைப் படைப்பதே' என்பதாகும்! ஓடப்பர், உயரப்பர், உதையப்பராகும் ஓடப்பர், பின்னர் அனைவரும் 'ஒப்பப்பர்' ஆதல் என்ற உலகப்பன் பாட்டின் செய்தி தான் பாரதிதாசன் படைத்த நாத்திகக் கவிதைகளின் சாரமும் சத்தும் ஆகும்!

ஒரு சமுதாயம் பொது நலச் சமுதாயமாக விளங்குகிறது(Welfare State) என்பதற்கு எத்தனையோ அடையாளங்களைக் கூறலாம். கம்யூனிஸ்டுகள் கூறும் அடையாளம், 'ஒரு சமுதாயம் தன் குழந்தைகளை, பெண்களை, முதியோரை எப்படி நடத்துகிறது' என்பதுதான். இந்தக் கண்ணோட்டத்தில் பாரதிதாசனின் மழலையர் பாடல்களையும், முதியோர் காதலையும் படித்துப் பார்க்க வேண்டும். இளமையின் பொன்னொளி மறைந்து, காலத்தின் குண்டும் குழியுமாய் வறண்டு கிடக்கும் தன் கிழ மனைவியின் முகத்தை வருணிக்கும் ஒரு கிழக் கணவன் கடைசியில் ஒரு கேள்வி கேட்கிறான் (குடும்பவிளக்கு) : நான் எதனால் இன்னும் இருக்கிறேன் எனக் கேட்கிறீர்களா? "அவள் இருக்கின்றாள் என்பதனால் இருக்கின்றேன்" என விடை கூறி முடிக்கின்றான். இது தான் காதல் வாழ்வின் செழுமை. எல்லோரும் எண்ணிக் கொண்டிருப்பதுபோல, காதல் வாழ்வின் வித்தோ- தொடக்கமோ அன்று! அது வாழ்வின் கனி- இறுதி விளைவு! ரஷிய சோசலிச சமுதாயம் வீழ்த்தப்பட்ட பின் நடந்த உடனடி - தடாலடி நடவடிக்கைதான் என்ன? தொழிற்சாலைகளில், வேலை நிறுவனங்களில் இயங்கி வந்த 'குழந்தைகள் காப்பகங்கள்' இழுத்து மூடப்பட்டன. இதன் உண்மைப் பொருள் என்ன? பெண் வீட்டுக்குள் மீண்டும் 'எஜமானி' ஆக்கப்பட்டார் ரஷியப் பெண்கள், பெண் விடுதலையின் உண்மைப் பொருளை இப்போது உணர்கின்றனர். பாரதிதாசன் பெரியாரியத்தின் அடிப்படைப் பகுதியான பெண் விடுதலையைச் சமூக விடுதலையின் பிரிக்கமுடியாத இணை அங்கமாக தூக்கிப்பிடித்தார்.



படிப்பகம்

www.padippakam.com

'பட்டங்கள் பெறுவதும் சட்டங்களை ஆள்வதுமட்டுமே' பெண் விடுதலை ஆகிவிட முடியாது! பெண்மை என்ற கருத்துருவாக்கத்தின் நடைமுறையின் மீது உருவாக்கப்பட்டிருக்கும் பெண்ணின் சதை சார்ந்த விழுமியங்கள் 'Values based on the skin and the flesh of the body of a woman' தகர்க்கப்பட வேண்டும். கற்பை இருவர்க்கும் பொதுவாக்குவது மென்மையான ஆண் இதயத்தின் அழகிய - வலுவற்ற கற்பனை. கற்பு என்ற சதைசார் பாலியல் கோட்பாடே வன்மையாகத் தகர்க்கப்பட வேண்டியதே கசப்பான உண்மை. அதாவது, பெண் தன் உடல்சார்ந்த மதிப்புகளையும், பொருளியல் நடவடிக்கைகளையும் தானே தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றவளாக இருக்க வேண்டும் என்பதுதான் இதன் உட்பொருள். இந்தக் கண்ணோட்டத்தில் காதலுக்கு வழி வைத்துக் கருப்பாதை சாத்துவதில் தவறென்ன கண்டீர் என்ற பாரதிதாசனின் வரியை நாம் ஆராய வேண்டும். இது ஏதோ கர்ப்பத் தடை அல்லது குடும்பக் கட்டுப்பாடு விளம்பரத்திற்காக எழுதப்பட்ட கவிதை அல்ல.

காதல் மனத்திறப்பும் கருப்பாதை அடைப்பும் ஆணின் பாலியல் உறவு குறித்த கண்ணோட்டங்களையே (attitude of Men towards sex and sexual relationship) உடைத்தெறிவதாகும். பெண் பிள்ளைபெறும் இயந்திரமன்று என்றார் பெரியார். மேலும் உடலுறவு இன்பநுகர்வுக்காக அமைய வேண்டுமே தவிர பிள்ளைபெறுவதற்காக மட்டும் என்றிருக்கக் கூடாது என்றார் அவர்.

பெண்ணுறவு தனக்கு ஆண் வாரிசு உண்டாக்கித் தருவதற்கான ஓர் வழிவாய்க்கால்; தேவைப்பட்டபோதெல்லாம் தன் புணர்ச்சி வெறியைத் தணிக்க வேண்டிய ஓர் சதை இயந்திரம் - என்ற இவ்விரண்டு மட்டுமே பொதுவாக எல்லா ஆண்களின் அணுகுமுறையாக இருக்கிறது. இதில் பெண்ணின் உடல், மனம், உள்ளுணர்வு என அனைத்துமே அழிக்கப்பட்டுவிடுகிறது. பெண்ணின் உடலுக்குள் வேட்கைகள், ஆர்வங்கள் முதலியன இருக்கின்றன என்பதோ அடியோடு மறக்கப்படுகிறது; புறக்கணிக்கப்படுகிறது. இந்நிலையில்தான் பெரியாரின் 'சோதனைக் குழாய்க் குழந்தை' (கட்டுரை: இனிவரும் உலகம்) கருத்து தோன்றுகிறது. ஆணின் கண்ணோட்டத்திலான பெண் விழுமியங்கள் அனைத்தும் 'கருப்பாதை சாத்துவதால்' ஒழிக்கப்படுகின்றன. பெண்ணின் கண்ணோட்டத்திலான இன்பநுகர்வுகள் 'காதலுக்கு வழிவைப்பதால்' அங்கீகரிக்கப்படுகின்றன. இப்படித்தான் இந்தவரியை நாம் வாசிக்க வேண்டும்.

பெரியாரியம் என்பது தற்போதைய திராவிட இயக்கங்களின் அரசியலில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். மனிதகுலத்தின் பொதுவான விடுதலையை முன்னிறுத்திய பெரியார், தான் வாழ்ந்த காலம் மற்றும் சூழல்களைக் குறிப்பாகக் கொண்டு, தமிழரின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு உரிமைகள், பெண் விடுதலை, சோசலிச சமூக அமைப்பு என்ற மூன்றையும் முன்மொழிந்தார். இக்கொள்கைகளுக்கான அணி திரட்டலில் பாரதிதாசன் இலக்கியத்தளத்தில் இருந்து பணியாற்றினார். பெரியாரும் பாரதிதாசனும் வென்றனரா என்பது காலம் கேட்கும் வினா? இன்னும் இன்னும் இது வினா நிலையில் இருப்பதாலேயே, வெல்லவில்லை என்பது வெளிப்படை; வெல்லுவார்கள் என்பது நம்பிக்கை. இன்றைய தமிழ்ச் சமுதாய அமைப்பில் நாளைய உலகில் கண்டிப்பாக இது நிறைவேறிவிடும் என்பதற்கான அறிகுறிகள் இன்றைய அரசியல் வானில் தென்படவே இல்லை. அப்படியானால் பாரதிதாசனின் இன்றைய பொருத்தப்பாடுதான் என்ன? இதை வெறும் கல்விசார் (academic) வினாவாகப் பார்க்கக் கூடாது. இது அரசியல் வினா ஆகும்.

பழங்காலத்து, மத்திய காலத்து அறிவாளிகள் (புத்தர், நபி) எவ்வளவு புரட்சிகரமானவர்களாக இருந்தாலும், அவர்தம் காலம் ஜனநாயகத்திற்கும் சோசலிசத்திற்குமான காலங்கள் அல்ல. புரட்சிகர கொள்கையும் கட்சியும் உருவாக்கப்பட்டிருந்த மார்க்சின் ஐரோப்பாவில் (ஜெர்மனி- இங்கிலாந்து) கூட இவை உருவாகவில்லை. எனவே புரட்சிகரமான கொள்கையோ, நிறுவனமோ மட்டுமே புரட்சியைக் கொண்டுவந்துவிடமுடியாது. இவை, குறிப்பிட்ட காலத்தின் பருண்மையான நடைமுறைகளோடு எவ்வளவு ஒன்றிணைக்கப்படுகின்றன என்பதே தத்துவத்தின், தலைமையின், கட்சியின், கலைஞனின் பொருத்தமும் வெற்றியும் ஆகும். இந்தவகையில் பாரதிதாசனின் கருத்துகள் முதல் மூன்று தேவைகளின் அவசியத்தையொட்டி பொருத்தப்பாடு பெறக் கூடும்!



படிப்பகம்

www.padippakam.com

# ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு

மார்ச் 7, 1999-ல் தமிழகத்தின் அனைத்து சாலைகளும் மதுரையை நோக்கியே இருந்தன. காவல்துறையின் அத்துணை பிரிவுகளும் கையில் ஒயர்லெஸ் கருவிகளுடன் மதுரை தமுக்கம் மைதானத்தைச் சுற்றியபடியே இருந்தன. 1997 சனவரி 19 ல் மதுரை தமுக்கம் கலையரங்கில் நடைபெற இருந்த தமிழர் எச்சரிக்கை மாநாடு தமிழக அரசால் தடை செய்யப்பட்டது. தடையை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் திரு.பழ.நெடுமாறன் அவர்கள் வழக்கு தொடுத்தார். காவல் துறையினரைக் கண்டித்தது நீதிமன்றம் மாநாடு நடத்துவதற்கு அனுமதி வழங்கியது.

தடைவுடைத்து ஈழத்தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு தமிழ்ழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு சார்பில் சாலையார் அரங்கில் மார்ச் 7 ஞாயிறு அன்று பேரெழுச்சி யாக நடைபெற்றது. தேனிசை செல்லப்பாவின் எழுச்சி இசையோடு மாநாடு துவங்கியது. தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு தலைவர் திரு. பழ. நெடுமாறன் தலைமை தாங்கினார். திரு அருணகிரி நாத ஞான சம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் (மதுரை ஆதின கர்த்தர்) மாநாட்டைத் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் திருவுருவப்படத்தை அருட்தந்தை சேவியர் அருள்ராகவும், தமிழறிஞர் சாலையார் திருவுருவப்படத்தை கவிஞர் இன்குலாபும் திறந்துவைத்து உரையாற்றினர். பாவலரேறு, சாலையார் இருவருக்கும் பிற்சிறப்பு விருதாக "உலகப் பெருந் தமிழர்" என்ற விருதை தாமரை பெருஞ்சித்திரனார் அவர்களிடம் நந்தன் ஆசிரியர் திரு. அருணாசலம் அவர்களும், முனைவர் சாலினி இளந்திரையனார் அவர்களிடம் பேராசிரியர் தமிழண்ணல் அவர்களும் வழங்கினர்.

தேனிசை செல்லப்பா அவர்கட்கு "பாசறைப் பாணர்" என்ற விருதை முன்னாள் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் வழங்கினார்.

மகளிர் அரங்கில் சாலினி இளந்திரையனார், தாமரை பெருஞ்சித்திரனார் அற்புதம் குயில்தாசன், தேன்மொழி, கவிதா ஆகியோர் உடிரையாற்றினர். மாணவர் அரங்கில் ம. செந்தமிழன், புதியவன், காசிநாத பாரதி, புகழேந்தி, மதுரை செந்தமிழ்க் கல்லூரி மாணவர் ஆகியோர் உரையாற்றினர்.

காலை முதல் நள்ளிரவு வரை நடைபெற்ற இம் மாநாட்டில் திருவாளர்கள் டாக்டர் மித்ரா (தெலுங்கு விடுதலை முன்னணி) ஏ.பி. வெங்கடேஸ்வரன் (இந்திய வெளியுறவுத் துறை முன்னாள் செயலாளர்) பண்ருட்டி எஸ். இராமச்சந்திரன்(மக்கள் உரிமைக் கழகம்) நெல்லிக்குப்பம் வி. கிருஷ்ணமூர்த்தி, பெ.மணியரசன் (த.தே.பொ.க.) தஞ்சை அ.இராமமூர்த்தி (சனதாதளம்) தியாகு(தமிழ் தமிழர் இயக்கம்) பேராசிரியர் பெரியார்தாசன் பேரா. ப. அருளி, முனைவர் சுபவீரபாண்டியன் (நந்தன் சிறப்பாசிரியர்) கவிஞர் அறிவுமதி மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தோர் சிறப்புரையாற்றினார்கள்.

ஈழ விடுதலை என்றாலே அரசியல் கட்சிகள் அச்சப்படும் நேரத்தில் ஈழ விடுதலையை ஆதரிப்பது தமிழ் மக்களின் கடமை என்பதை உலகுக்கு உணர்த்தும் வகையில் தமிழர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது விதித்துள்ள தடையை இந்திய அரசு நீக்க வேண்டும், தமிழ் நாட்டில் அனைத்துக் கல்வி நிலையங்களிலும் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் மட்டுமே பாடமொழி, பயிற்று மொழி என்ற தமிழ்ச்சான்றோர் பேரவையின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு செயல்படுத்த வேண்டும், தமிழ் ஈழ அகதி முகாம்களை ஐ.நா. பொறுப்பில் ஒப்படைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பல்வேறு பகுதிகளிலிருந்து வாகனங்களில் தோழர்கள் திரளாக வந்திருந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

## சென்னையில் த.தே.பொ.க. கொள்கை விளக்கப் பொதுக்கூட்டம்

**பல்லாவரம்**

12/3/99 சென்னை பல்லாவரத்தில் த.தே.பொ.க. கொள்கை விளக்கக் கூட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது. தோழர் பா.ந.ஆறுமுகம் தலைமையில் தோழர்கள் பெ.மணியரசன் ச. யோகநாதன், அ.பத்மநாபன் நிர்மலா ஆகியோர் பேசினர். தோழர் ப.விசேந்திரன் நன்றி கூறினார்.

**சாபர்கான் பேட்டை**

13/3/99 சனிக்கிழமையன்று சாபர்கான் பேட்டையில் கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. தோழர் பொ. மாயவன் தலைமை தாங்கினார். தோழர் தி. முத்துக்குமார் வரவேற்புரையாற்றினார். தோழர்கள் பெ. மணியரசன், ச. யோகநாதன் சா. சந்திரேசன் சு. அருணா நிர்மலா ஆகியோர் கொள்கைகளை விளக்கி சிறப்புரையாற்றினார்கள்.

தோழர் தி. இராமச் சந்திரன் நன்றி கூறினார்.

## தமிழக இளைஞர் முன்னணி கண்டன ஆர்ப்பாட்டம்

செயலலிதாவின் ஊழல் வழக்குகளை தனி நீதி மன்றத்தில் இருந்து மாற்றிய பாரதிய சனதா அரசைக் கண்டித்து தமிழக இளைஞர் முன்னணி தஞ்சை மாவட்டக்குழு சார்பில் தஞ்சையில் கண்டன ஆர்ப்பாட்டம் 16.2.99 அன்று நடைபெற்றது. தோழர் இரா.சு. முனியாண்டி(நகரச் செயலாளர், த.இ.மு) தலைமை தாங்கினார். தோழர்கள் கி. வெங்கட்ராமன் (தலைமை செயற்குழு த.தே.பொ.க.) நா. வைகறை(பொதுச் செயலாளர், த.இ.மு.) கிட்டு மாரிமுத்து( மையக்குழு த.இ.மு.) வே. தனசேகரன் (மையக்குழு, த.இ.மு.) பெ.வினோபா (மாவட்டக் குழு த.இ.மு.) ப. சந்திரசேகர் (மாவட்டக் குழு, த.இ.மு) ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். தோழர் துரை. கலியமூர்த்தி நன்றி கூறினார்.

## தமிழில் தேர்வு தகாத செயலா? கண்டன எதிர்ப்பு பேரணி-பொதுக்கூட்டம்

மருத்துவர் ஐ. சிவசுப்ரமணிய ஜெயசேகர் அவர்கள் நாகை மாவட்ட ஏனங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவராகப் பணிபுரிந்து வருகிறார். இவர் நோயாளிகளுக்காக எழுதும் மருந்து சீட்டில் நோய்களின் அறிகுறிகளையும் மருந்துகளின் பெயர்களையும் தமிழில்தான் எழுதுவார். 1995-1998 ஆம் ஆண்டுகளில் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் எம்.டி வகுப்பில் சேர்ந்து படித்தார். எழுத்துத் தேர்வினை தமிழில் எழுதினார் . ஆய்வேட்டை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அளித்துள்ளார். ஆனால் தேர்வு நடத்தவந்த தேர்வாளர்கள் தேர்வை நடத்த மறுப்பு சொல்லி விட்டனர். இவர் தேர்வில் வெற்றி பெறவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழில் மருத்துவத் தேர்வு எழுதியதற்காகத் தேர்வில் வெற்றி பெறவில்லை என்று அறிவித்துள்ளதைக் கண்டித்து தமிழியக்கம், தமிழ் வழிக் கல்வி இயக்கம், தஞ்சாவூர் தமிழ் பேரவை, தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி, மக்கள் கலை இலக்கியக் கழகம், தமிழக மாணவர் முன்னணி உள்ளிட்ட அமைப்புகள் சார்பாக 15.2.99 அன்று தஞ்சையில் கண்டனப் பேரணி நடந்தது. தொடர்வண்டி நிலையத்தில் புறப்பட்ட ஊர்வலம் பெசண்ட் அரங்கத்தில் முடிவடைந்தது.

அங்கு பேராசிரியர் பி. விருத்தாசலம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திருவாளர்கள் தஞ்சை அ. இராமமூர்த்தி (சனதாதளம்), பெ. மணியரசன்(த.தே.பொ.க.), அரங்க சின்னப்பா (சி.பி.அய்) காளியப்பன்(ம.க.இ.க.) பேரா. இளமுருகன் (தமிழியக்கம்), முனைவர் இராமசுந்தரம் , ம.செந்தமிழன் (த.ம.மு), ஏழைதாசன் (இ.ம.சங்கம்) ஆகியோர் கண்டன உரையாற்றினர். முன்னதாக முனைவர் ஆ. இறையரசன்(தஞ்சாவூர் தமிழ் பேரவை) வரவேற்புரையாற்றினார். இறுதியில் தோழியர் சிவலலிதா(த.ம.மு) நன்றி கூறினார்.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்ச் சான்றோர் பேரவையும் பாரதிய ஜனதாக் கட்சியும்

தமிழுக்காக அறிஞர்களும் உணர்வாளர்களுமாக 100 பேர் சாகும்வரை பட்டினிப் போராட்டம் நடத்தவுள்ள செய்தி தமிழக மெங்கும் பரவி விட்டது. அது பல தாக்கங்களை உண்டாக்கி வருகிறது.

அச் செய்தி நமது எதிரி முகாமையே தாக்கியுள்ளது; நமக்கே வியப்பாக இருக்கிறது. ஆம், பாரதிய ஜனதாக் கட்சியின் திருச்சி மாநாட்டில் அதன் இளைஞர் பிரிவு நிறைவேற்றியுள்ள தீர்மானம் அந்தத் தாக்கத்தின் வெளிப்பாடு.

ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் மட்டுமே பாட மொழி, பயிற்று மொழி. 6-ஆம் வகுப்பிலிருந்து ஒரு மொழிப்பாடமாக மட்டுமே ஆங்கிலம் இருக்க வேண்டும் என்பது பா.ஜ.க. இளைஞர் மாநாட்டுத் திருச்சித் தீர்மானம்! தமிழ்ச் சான்றோர் பேரவைத் தீர்மானத்தை அப்படியே போட்டுள்ளார்கள்.

தமிழக அரசியல் சூழல் எவ்வளவு வேகமாக மாறி வருகிறது பாருங்கள். நம்மைப் போன்ற தமிழ்த் தேசிய மற்றும் தமிழ் மொழி அமைப்புகள் தாம் இச்சூழல் உருவாகக் காரணகர்த்தாக்கள்.

தமிழ்நாட்டில் கட்சியை வளர்க்க வேண்டுமானால் தமிழகத்தின் மொழிச் சூழலை அனுசரித்துப் போக வேண்டும் என்ற உத்தியில் இந்திய தேசிய வெறி அமைப்பான பா.ஜ.க. தமிழ் வழிக் கல்விக்குக் குரல் கொடுக்க முன் வந்திருக்கலாம்.

பா.ஜ.க. இளைஞர் பிரிவு இத் தீர்மானத்தில் இன்னொரு கோரிக்கையைத் திணித்துள்ளது. எட்டாம் வகுப்பு முதல் மூன்றாவதாக ஒரு இந்திய மொழியை மொழிப்பாடமாக்க் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே அது. இன்னொரு இந்திய மொழி என்பது இந்தி அல்லது சமஸ்கிருதம் ஆகும். கரடிக் குட்டிக்கு சடை வளராமல் போகலாம்; பாரதிய ஜனதா இளைஞர்களுக்கு இந்துத்துவ வெறி இல்லாமல் போகாது. அதனால் தான் இந்தி அல்லது சமஸ்கிருதத்திற்கு மறைமுகக் கோரிக்கை.

இருக்கட்டும்; பாரதிய ஜனதாவே, தமிழ் வழிக் கல்விக்குக் குரல் கொடுக்க வேண்டிய அளவிற்கு, நிலைமை மாறி வருகிறது. தமிழக அரசு என்ன செய்யப் போகிறது?

100 தமிழ் உணர்வாளர்கள் தமிழ் வழிக் கல்விக்காக 1999 ஏப்ரலில் சாகும்வரை பட்டினிப் போராட்டம் நடத்தப் போகிறார்கள். த.சா.பே. சார்பில் நடைபெறும் இப் போராட்டம் தமிழர் தம் தேசியப் போராட்டம் இதன் வெற்றிக்குப் போராடுவோம்!

## கல்வி உதவித் தொகையை வழங்கக் கோரி தமிழக மாணவர் முன்னணி தட்டு ஏந்தும் போராட்டம்

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட நலத்துறைகள் சார்பில் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கும் கல்வி உதவித் தொகையைக் கல்வியாண்டு முடியும் நிலையில் கூட வழங்கப்படாததைக் கண்டித்து தமிழக மாணவர் முன்னணி சார்பில் தஞ்சையில் 4/3/99 அன்று தட்டு ஏந்தும் போராட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தோழர் ந.மதிவாணன் தலைமையில் காலை 10 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து மாணவர்கள் கைகளில் தட்டுகளை ஏந்திக் கொண்டு நகரில் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலம் வந்தனர்.

**உடன் வழங்கு உடன் வழங்கு கல்வி உதவித் தொகையை உடன் வழங்கு**

**தேர்வுக் கட்டணத்தை செலுத்துவதற்கு உதவியாக உதவித் தொகை உடன் வழங்கு**

என்று முழக்கங்களை எழுப்பிக் கொண்டு ஊர்வலமாக பழைய பேருந்து நிலையம் வரை சென்றனர்.

பின்பு கோரிக்கைகளை விளக்கி தோழர்கள் ம. செந்தமிழன்(பொதுச் செயலாளர், த.மா.மு.) நா. வைகறை(பொதுச் செயலாளர் தமிழக இளைஞர் முன்னணி) மோ. ஸ்டாலின் (மையக்குழு, த.மா.மு) ரெ. மகேந்திரன் (மையக்குழு த.மா.மு.) இராசசேகர், ரெ. சிவலலிதா ஆகியோர் உரையாற்றினார்கள். பொது மக்கள் அனைவரும் மாணவ, மாணவியரைப் பாராட்டினார்கள்.



படிப்பகம்

போராட்டம் தான். கடவுளே இல்லையென்றால் கோவில் எதற்கு? அங்கு செல்லும் பாதையில் நடப்பதற்கான உரிமைதான் எதற்கு?

- டாக்டர் து. இளமுருகன் எம்.டி., திருச்சி

ஆசிரியர் குறிப்பு:

மதவெறியும் மதமும் ஒன்று என்று அக்கட்டுரை குறிப்பிடவில்லை. மத நம்பிக்கை அவரவர் உரிமை என்று அதில் சொல்லப்பட்டுள்ளது. மத வெறிக்கு மாற்றாக நாத்திகம் வைக்கப்படவில்லை உண்மையான மதச் சார்பின்மையே மாற்றாக வைக்கப்பட்டுள்ளது. நாத்திகம் தோற்றுப் போனதாகக் கருத முடியாது. நாத்திகத் தத்துவம் தான் அறிவியல் சார்ந்தது.

பெரியார் நடத்தியது மூடநம்பிக்கைக்கும் பார்ப்பனர் ஆதிக்கத்திற்கும் எதிரான ஒரு வகைப் போராட்டம். அது ஆத்திகத்திற் கெதிரான நாத்திகத்தின் வன்முறை அல்ல. 'களப்பிரர் காலம்' 'ரஷியாவில் சர்ச்சுகள் எரிப்பு' என்று கூறப்பட்டுள்ளவை விவாதத்திற்குரியவை.

-ஆசிரியர்

**உணர்ச்சிப் பிழம்பாக...**

பிப்ரவரி இதழில் தன்னுரிமை விரும்பி அவர்களின் கவிதையும், சட்டத்துறையில் பா.ஜ.க.வின் தலையீடு குறித்த கட்டுரையும், பேயரசு பற்றிய இராசேந்திர சோழனின் விளக்கமும் சிறப்பு. தமிழ்த் தேசியத் தோழர்களுக்கு பெ. மணியரசன் எழுதியுள்ள கட்டுரை நன்றாக உள்ளது. சாலையாரின் பிளிறல்கள் கவிதைக் குத்து உணர்ச்சிப் பிழம்பாக ஒவ்வொரு தோழரையும் மாற்றும்.

- வவுனியன், திருப்பூர்.

**கருத்துகள் கன்னத்தில் அறைவது போல்**

தன் சாதிப் பற்றும், தமிழ்த் தேசியமும் என்று தமிழ்த் தேசியத் தோழர்களுக்கு பெ.ம. எழுதிய கட்டுரையை ஒவ்வொரு தமிழனும் படித்துத் தெளிவு பெற வேண்டும். கருத்துக்கள் கன்னத்தில் அறைவது போல் உள்ளன. நடுநிலையோடு படித்தால் சாதி நச்சுத் தாக்கத்திலிருந்து தப்பி உய்யலாம். விழிப்பார்களா தமிழர்...?

மாரியப்பன் அவர்களின் நாட்டுப்புற ஆய்வில் வெளிநாட்டார் நோக்கம் என்னும் கட்டுரை சிறந்த கருத்துக் குவியல். பட்டியூர் பாவலரின் வீச்சு மிக்க மதவாதம் பற்றிய கட்டுரை இதழுக்கு வலிமை கூட்டுகிறது. இரா.சோ. வின் கட்டுரை, கி.வெ. அவர்களின் பால்தாக்கரே பற்றிய கட்டுரை அருமையாய் அமைந்துள்ளன.

- கவிஞர் தமிழேந்தி, அரக்கோணம்

திரு. பெ. மணியரசன் அவர்கள் தமிழ்த் தேசிய தோழர்களுக்குத் தொடரில் தன் சாதிப் பற்றும் தமிழ்த் தேசியமும் கட்டுரை மிகவும் அருமை. தன் சாதிப்பற்றுக்கு பிறகுதான் தமிழின் மீது பற்று என்று செயல்படக் கூறியவர்கள் பெரியார் பெயரைப் பயன்படுத்திக் கொள்வது நேர்மைக் குறைவாகும் என ஆணித்தரமாக எழுதியுள்ளீர்கள். தமிழத் தேசிய அணிவகுப்பில் முன்னணியில் நிற்கும் சிலர் சாதியமைப்புகளில் பங்கு வகிப்பது வேதனையளிக்கிறது.

தன் சாதிப் பற்றை மறுத்த தமிழ்த் தேசிய வீரர்கள் தாம் எதிர்கால தமிழ்த் தேசியத்தைப் படைக்கப் போகிறவர்கள் என சிறப்பாக எழுதியுள்ளீர்கள்.

- புலவர் தங்க. பாண்டியன், சென்னை

மதவாதம் சகிப்புத் தன்மை இல்லாதது என்று விளக்கிய பட்டியூர் பாவலர்க்குப் பாராட்டு. இதை இன்னும் விரிவாக்கி சிறு நூலாக வெளியிடலாம்.

- செந்தூரன், சிதம்பரம்.

www.padippakam.com



# அச்சில் வார்த்த வீடுகள் அடையாளமாய்...

- அமரன்

வாழும் மனிதர்களின் பசிக்கு
வயல் காடு கழனிகளில்
காலம் இரையானது...

சுட்டெரிக்கும் வெயில்
சூடு தேடும் குளிர்
நல்ல மழை
நள்ளிரவில்... நனைந்து
பயிர் வளர்த்து பயிர் அறுத்து
அடித்துத் தூத்தி...
களத்து மேட்டில
கூலிக்கு...
ஐயாவின் கருணைக்கு
காற்றில் ஒதுங்கிய பதறுக்கு

வயல்களில் வளர்த்த
பயிர்கள் மாறின
வழக்கம் போல்
வாழ்க்கை...!

கும்பலாய் இருந்த
குடிசைகள் மறைந்து
வரிசையாய்... அங்கும்
அச்சில் வார்த்த வீடுகள்
அடையாளமாய்...!

கரடு முரடான களிமண் சாலை
கருங்கல் செம்மண் சேர்ந்து
கால்களும் ரணமாகியது...

இருட்டில் புள்ளியாய்
வீட்டுக்கொரு... வீதிக் கொரு
விளக்கு... வெளிச்சமும்
வேறுபடுத்திக் காட்டும்

சாப்பாட்டு வேளையில்
சத்தமாய்... சத்துணவுக்கு
சட்டையில்லா உடம்புடன்
தட்டுகளுடன் தறிகெட்டு ஓடும்
தவப்புதல்வர்கள்...!
வெளியுலகத் தொடர்புக்கு

'கல்லறை' மாடத்தில்
கலர் டி.வி.

கல்விக் களத்தில்
கற்றுத் தேர்ந்தாலும்
காட்டிக் கொடுக்கும்
சாதிச் சான்றிதழ்
ஒதுக்கீடு...
உள்ளேயும் தெரியும்

தேர்தல் திருவிழாவில்...
கார்களில் கட்டுகளாய் பணம்
வாக்குச் சாவடிகளின் ... வரிசையில்...
காம்ரேடுகள்- கட்சிக்காரர்கள்
அண்ணன்கள் தம்பிகள்
அக்கா தங்கை ... அன்று மட்டும்
அடையாளம் மாறுவோம்

கருத்தரங்கில்... காகிதத்தில்
தலித்துக்கள்...!

தாழ்த்தப்பட்டவர்களுக்கு
தனிக் குவளை மட்டுமா...!
வீட்டைக் கட்டினால்...
வெறிகொண்டு இடிக்கிறான்
விரும்பிக் கல்யாணம்
கட்டிக் கொண்டால் - விரட்டுகிறான்
வெட்டரிவாளுடன்...
கழுத்தில் தாலி இருந்தும்
காவல் துறைக்கு ... கடத்தல் காரன்

எல்லாம் மாறினாலும்
எங்கள் வாழிடங்கள்
எங்கள் உறவுகள்
எங்கள் சாதிகள்
என்றும் போல்


**இதழ் விவரம்**

| | | |
|---|---|---|
| இதழ் பெயர் | : | தமிழர் கண்ணோட்டம் |
| பருவம் | : | மாதம் ஒரு முறை |
| ஆசிரியர் | : | பெ. மணியரசன் |
| இந்தியக் குடி உரிமையா? | : | ஆம் |
| முகவரி | : | 53(அ) சமீன்தார் குடியிருப்பு, புது ஆற்றுச் சாலை, தஞ்சாவூர்-1. |
| வெளியிடுபவர் | : | அ. பத்மநாபன் |
| இந்தியக் குடி உரிமையத | : | ஆம். |
| முகவரி | : | 525 என்.வி.என். நகர் திருமங்கலம் சென்னை - 43. |
| அச்சிடுவோர் | : | நீட் பிரிண்டர்ஸ் எல்லீசு சாலை, சென்னை - 3. |
| ஒரு விழுக்காட்டுக்கு மேல் மூலதனம் போட்டிருப்பவர்கள்: | | அ. பத்மநாபன் |
| முகவரி | : | மேலே கண்டது. |

மேற்கண்ட விவரங்கள் யாவும் நானறிந்தவரை உண்மை என்று உறுதி கூறுகிறேன்.

அ. பத்மநாபன்
ஒ.ம்.